# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 02 சனிக்கிழமை (19-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:326


## அக்கரைப்பற்றில் பதற்றம் தணிந்தது

# கடத்தப்பட்ட இளைஞர் நேற்று வீடு திரும்பினார்!

## கடத்தியவர்கள் யார்? பொலீஸார் விசாரணை

அக்கரைப்பற்று,ஒக்ரோபர்19

**அக்கரைப்பற்றுப் பகுதியில் மூன்று நாள்களாக நீடித்த முஸ்லிம் இளைஞர் கடத்தல் விவகாரம் நேற்று முடிவுக்கு வந்தது. கடத்தப்பட்டிருந்த இளைஞர் சீனி முஹம்மது வஜாட் (வயது 24) அவரது வீட்டில் வைத்து அக்கரைப்பற்று பொலீஸாரால் நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டார். அதையடுத்து அவர் உடனடியாக பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.**

கடத்தப்பட்ட இளைஞர் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் உடனடியாக அக்கரைப்பற்றுக்கு விரைந்தார். அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்துக்கு சென்ற அவர் இக்கடத்தல் தொடர்பாக பொலீஸ் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள், சமாதான அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோருடனும் அவர் உரையாடி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுகளுடன் 2 பெண்கள் கைது!

கொழும்பு,ஒக்.19

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகள் சகிதம் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் இரண்டு யுவதிகள் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை விசாரணைக்கு உட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிகரெட் விலைகள் 50 சதத்தால் உயர்வு

கொழும்பு,ஒக்.19

நேற்று நள்ளிரவு முதல் சிகரெட் வகைகளின் விலைகள் 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டிருக் கின்றன. 'பிரிஸ்டல்' சிகரட்டுக்களைத் தவிர ஏனைய அனைத்து ரக சிகரட்டுக்களினதும் விலைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன என்று இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கின்றது.

சிகரட் விலைகள் அதிகரிப்புக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

## சந்தேக நபர்களுக்கு நீதிவான் எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.19

உடதலவின்ன 10முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை வழக்கு நேற்று தெல்தெனிய நீதிமன்றத்தில் நீதிவான் இனோகா பிரணசிங்க முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்ற அதிகாரிகளுக்கு சந்தேக

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் ஐவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு,ஒக்.19

யாழ்ப்பாணம், மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக இராணுவத்தினர் ஐவருக்கு எதிராக சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் நேற்று கொழும்பு உயர் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

மிருசுவில் பொதுமக்கள் 8பேர் படுகொலை செய்யப்பட்டமை உட்பட 19குற்றச்சாட்டுகள் இந்தப்படையினர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

வழக்கு விசாரணை மூன்று பேர் அடங்கிய நீதியரசர் குழுவினால் நடத்தப்படும். (ஐ)

## தமிழாராய்ச்சி மாநாட்டுக்குப் பின்னர் நகரில் நடக்கும் மாபெரும் தமிழ்விழா

# கலைஞர்கள், படைப்பாளிகள் சங்கமிக்கும் மானுடத்தின் தமிழ்க் கூடல் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

தமிழர் தாயகத்திலிருந்தும் தமிழகம், தென்னிலங்கை, ஐரோப்பா என்று பல திக்குகளிலிருந்தும் வருகை தந்துள்ள கலைஞர்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் சங்கமிக்கும் மாபெரும் தமிழ்மாநாடு யாழ்.நகரில் வீரசிங்கம் மண்டபத்தில் - இன்று காலை கோலாகலமாக ஆரம்பாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம், 'நிதர்சனம்' ஒளிபரப்பு நிறுவனம், தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஆகியன இணைந்து மிகப் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் இந்த மாநாட்டை நடத்துகின்றன.

தமிழர் போராட்டத்தின் நியாயத்தை சர்வதேசத்துக்கும் குறிப்பாக தென்னிலங்கை, தமிழ்நாடு படைப்பாளிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு எடுத்துக் கூறி அவர்கள் மத்தியில் நிலவும் தவறான அபிப்பிராயங்களை களையும் நோக்குடன் இந்த தமிழ் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கலை, பண்பாட்டுக் கழகம் தெரிவித்திருக்கிறது.

'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நிகழ்வு வருடந்தோறும் தொடர்ந்து நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை 9.00 மணிக்கு யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் தொடங்கவுள்ள இந்நிகழ்வு தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறும்.

தமிழ் கவிதை, சிறுகதை, குழந்தை இலக்கியம் தொடர்பான மூன்று முக்கிய அமர்வுகள் இன்று முதல்நாள் இடம்பெறவுள்ளன.

சுமார் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த நான்கு நாள் நிகழ்வில் இணைகின்றனர்.

இலக்கிய கர்த்தாக்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள், கல்விமான்கள், பேராசிரியர்கள், தமிழினப் பற்றாளர்கள், ஊடகவியலாளர்கள் என்று பலதரப்பட்ட துறைகள் சார்ந்த பலர் பேராளர்களாக மாநாட்டை அலங்கரிக்கவுள்ளனர்.

மானுடத்தின் தமிழ்க் கூடலில் சிறப்புரையாற்றுவதற்காக தமிழகத்திலிருந்து விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான இரா. திருமாவளவன், கவிஞர் இன்குலாப், ஓவியர் மருது, சர்ச்சைக்குரிய திரைப்படமான 'காற்றுக்கென்ன வேலி' இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், எழுத்தாளர் ப.செயப்பிரகாசம் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று இங்கு வந்துசேர்ந்தனர்.

வன்னி, கிழக்கு, கொழும்பு, மலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் போராட்டத்தின் நியாயத்தை சர்வதேசத்துக்கும் உரைக்கும் நிகழ்வு

## 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' பற்றி புதுவை

யாழ்ப்பாணம்,ஒக்.19

தமிழ் மக்கள் மனிதவதையில் இருந்து விடுதலை பெறுவதற்காகவே போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள் என்ற செய்தியை சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் தமிழகத்திற்கும் எடுத்துரைக்கவே 'மானுடத்தின் தமிழ்க கூடல்' நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் விருப்பப்படி அவரின் வழிகாட்டலில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் இன்று முதல் நான்கு தினங்கள் இடம்பெறவுள்ள 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வு தொடர்பாக விளக்கமளிப்பதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் அவருடன் நிதாசனப் பொறுப்பாளர் சேரலாதன், கலைபண்பாட்டுக்கழக சர்வதேச தொடர்பாளர் நகுலன், நிகழ்ச்சி அமைப்பா

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மீள்குடியமர்வுக்கு உலக வங்கி 310 கோடிரூபா கடனுதவி

கொழும்பு,ஒக்.19

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தவும் அரசாங்க நிறுவனங்களைப் புனரமைக்கவும் உலக வங்கி 310 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கும். இலங்கைக்கு இக்கடன் உதவியை வழங்குவது குறித்து நவம்பர் மாதம் உலக வங்கி தீர்மானிக்கும் என்றும் டிசெம்பர் மாத இறுதிக்குள் கடனுதவி கிடைக்கும் என்றும் பிரதமரின் செயலாளரான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

"இக்கடனுதவி 15 ஆண்டுகளில் திருப்பிச்செலுத்தப்படவேண்டும். அக்கடனுக்கு வட்டி செலுத்தப்படமாட்டாது. யுத்தத்தினால். அரசாங்க நிறுவனங்களை சரிவர இயக்க முடியாத நிலையே இருந்தது. கட்டடங்கள் தகர்ந்துள்ளன. ஊழியர்கள் இல்லை.

மாவட்ட மட்டத்தில் இந்த நிறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மானுடத்தின் தமிழ்க் கூடலில் இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.18

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் 'நிதர்சனம்' மற்றும் தமிழ்த்தாய் வெளியீட்டகம ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' மாநாட்டின் முதல் நாளான இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்றைய மாநாட்டில் தொடக்க நிகழ்ச்சியை அடுத்து கவிதை, சிறுகதை, குழந்தை இலக்கியம் ஆகியன தொட[illegible]ன மூன்று அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 9.00 மணிமுதல் 11.00

(2ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் படுகொலை தொடர்பாக

## டக்ளஸ் விசாரிக்கப்படாததற்கு உலக ஊடக அமைப்பு கண்டனம்

கொழும்பு,ஒக்.19

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இதுவரை விசாரணை செய்யப்படாததற்கு உலக ஊடகவியலாளர்கள் அமைப்பான 'எல்லை கடந்த செய்தியாளர்கள்' (ஆர்.எஸ்.எவ்.) என்ற அமைப்பு கண்டனம் தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த அமைப்பு நீண்ட கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்திருக்கிறது.

நிமலராஜன் படுகொலைக்குப் பின்னால் இருந்திருக்கக் கூடியவர்களைப பொலீஸ் விசாரணையாளர்கள் விசாரிக்கவில்லை. நிமலராஜன் தனது வீட்டில் இருந்தபோது ஈ.பி.டி.பியினரே

(2ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் ஆர்ப்பாட்டங்கள்

கல்முனை,அம்பாறை,ஒக்.19

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நடத்தும் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை ஆதரித்து நேற்று அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஜூம

(12ஆம் பக்கம் பார்க்க)



ஊடகவியலாளர் நிமலராஜனின் சிறிய தந்தை எஸ்.லோகநாதன் நினைவுச் சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும் நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் வலி.தென் கிழக்கு பொது அமைப்புகளின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:ரமணன்)

# தமிழினத்துக்கு எதிரான சவால்களை துணிச்சலுடன் எதிர்த்தவர் நிமலராஜன்

## அஞ்சலி நிகழ்வில் அவருக்கு புகழாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

ஊடகவியலாளர் நிமலராஜனை படுகொலை செய்தவர்கள் அதன் மூலம் அடைய நினைத்ததற்கு எதிர்மாறான நிகழ்வுகளே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் வலி. தென்கிழக்கு பொது அமைப்புக்களின ஒன்றியத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம். நிமலராஜனின் இரண்டாவது நினைவுதின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. யாழ்.பரமேஸ்வராச் சந்தியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவா பேரவை அலுவலகத்தில், அதன் தலைவர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஓர் ஊடகவியலாளனுக்கு இருக்க வேண்டிய பண்புகளை சிறப்பாக கொண்டு விளக்கியவர் நிமலராஜன். தமிழினத்துக்கு எதிரான சவால்களை எதிர்கொள்ளும் வெறித்தனம் அவரிடம் மேலோங்கியிருந்தது.

நிமலராஜனுடைய தியாகம், தமிழின விடுதலை வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.பரணிதரன, யாழ்மாநகர முதல்வர் செ.கந்தையன், யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத தலைவர் செ.தவச்செல்வன் ஆகியோரும் மற்றும் ஊடகவியலாளர்கள் பலரும் உரையாற்றினர்.

முன்னதாக, மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான நிகழ்வில் நினைவுச் சுடரை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சீ.வி.கே.சிவஞானம் ஏற்றி வைத்தார். ஊடகவியலாளர் நிமலராஜனின் சிறிய தந்தை எஸ்.லோகநாதன் மலர் வணக்கத்தை தொடக்கி வைத்தார். அனைவரும் மலர் வணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. (ஐ-9)

# தனியார் பஸ் தரிப்பிடம் முற்றவெளிக்கு மாற்றப்படும்

## போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்தனியார் பஸ் நிலையம் யாழ் நகரப் பகுதியில் இருந்து முற்றவெளிப் பகுதிக்கு மாற்றப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாநகர சபை மேயர் மேற்கொண்டுள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக நேற்று நடத்தப்பட்ட கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மினிபஸ்களுக்கான தரிப்பிடமாக யாழ்முற்றவெளிப்பகுதி அமையும் எனவும் குறிப்பிட்ட நேர அட்டவணையின்படி மினிபஸ்கள் யாழ். நகரப்பகுதிக்குள் வந்து தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்லவேண்டும் எனவும் -

ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி -

பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் மினிபஸ்கள் அனைத்தும் பஸ்நிலையத்திற்குப் பின்பக்கமாக - யாழ்.மின்சார நிலைய வீதியிலும் - காங்கேசன்துறை வீதியூடாகச் செல்லும் மினிபஸ்கள் மின்சார நிலைய வீதியில் சீமாட்டி புடைவைக் கடைக்கு முன்பாகவும் -

சாவகச்சேரி, கொடிகாமம், முகமாலை ஆகிய இடங்களுக்குச் செல்லும் மினிபஸ்கள் யாழ்பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வைரவர் ஆலயத்திற்கு முன்பாகவும், கச்சேரி செல்லும் மினிபஸ்கள் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் ஹற்றன் நஷனல் வங்கிக்கு முன்பாகவும் -

குறிப்பிட்ட நேரத்தில் வந்து தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். அதுவரை மினிபஸ்கள் முற்றவெளியில் உரிய தரிப்பிடத்திலேயே நிற்கமுடியும்.

இதேவேளை -

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு பொருள்களை இறக்கும் வாகனங்கள் யாழ். சத்திரத்துச் சந்தியில் இருந்து யாழ்பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வைரவர் ஆலயம் வரையான ஆஸ்பத்திரி வீதிப் பகுதியில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் பின்னர் மாலை 5 மணிக்குப் பின்னரும் மட்டுமே பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடமுடியும். இதன்போது பொருள்களை ஏற்றி இறக்கும் வாகனங்களுக்கு தரித்துநிற்கும் கட்டணமாக ஒரு மணித்தியாலத்திற்குப் 10 ரூபா வீதம் அறவிடப்படும்.

ஸ்ரான்லி வீதியில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் வாகனங்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் இடதுபக்கமும், செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் வலது பக்கமும் தரித்து நின்று பொருள்களை ஏற்றி இறக்க வேண்டும்.

இதேவேளை -

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக - பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக - இருக்கும் வர்த்தகப் பொருள்கள் அனைத்தும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றப்படவேண்டும் எனவும் இல்லையேல் அவை மாநகரசபையினரால் பலவந்தமாக அகற்றப்படும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நகரில் ஓட்டோக்களை நிறுத்துவதற்கு பொருத்தமான இடம்ஒன்று விரைவில் தெரிவு செய்யப்படும் எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் வணிகர் கழக பிரதிநிதிகள், ஓட்டோ சங்கப் பிரதிநிதிகள், மினிபஸ் சங்கப் பிரதிநிதிகள், வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பிரதிநிதிகள், யாழ்பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய நடைமுறைகள் அனைத்தும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-8)

## நினைவு முத்திரை இன்று வெளியீடு




உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் 150 வருடகால சேவையை முன்னிட்டு 4 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை இன்று சனிக்கிழமை கல்லூரியில் தபால் திணைக்களத்தால் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் இந்நிகழ்வைக் குறிக்கும் பொருட்டு ஒரு மலரும் வெளியிடப்படவுள்ளது. இந்நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி, வடக்கு - கிழக்கு மேலதிக கல்விப்பணிப்பாளர் சி.சிவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

பழைய மாணவ சங்கத் தலைவர் பேராசிரியர் ஆ.நவரத்தினராஜா நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், அதிபர் கி.நடராஜா, பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை மற்றும் கனடாக்கிளை ஆகியோரின் அனுசரணையுடன் இவ்வைபவம் நடைபெறவுள்ளது.

(ஐ)

# 10 லட்சம் பனம் விதை நடுகை நாளை அங்குரார்ப்பண நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக்.19

பனை அபிவிருத்திச்சபையின் பத்து லட்சம் பனம் விதைகள் நடுகைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வல்லை முனியப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பனம் விதை நடுகை நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பத்து லட்சம் பனம் விதைகளும் இவ்வாண்டு இறுதிக்குள், குடாநாட்டின் பல இடங்களிலும் நடுகை செய்யப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.(ஐ-9)

# காஞ்சிரங்குடா படுகொலைகள் விசாரணைகள் திங்கள் ஆரம்பம்

## உள்துறை அமைச்சுக்கு அறிக்கை

கொழும்பு,ஒக்.19

அம்பாறை, காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாம் அருகே ஏழு பொதுமக்கள் சுட்டுக் கொள்ளப்பட்ட சம்பவத்தை விசாரணை செய்வதற்கு என நியமிக்கப்பட்ட குழு அதன் விசாரணைகளை நாளை மறுதினம் திருக்கோவில் பிரதேசத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை வரை காலை, மாலை என இரு அமர்வுகளாக விசாரணைகள் நடைபெறும்.

இக்குழுவினர் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

காஞ்சிரங்குடா வன்செயல்கள் தொடர்பாக தமது முறைப்பாடுகளை தெரிவிக்கவிரும்புவோர் மேற்படி இரு தினங்களிலும் நேரில் சென்று தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம். விரும்பினால் எழுத்து மூலமும், சத்தியக் கடதாசி வடிவில் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

சமாதான நீதிவானின் உறுதிப்படுத்தலோடு 'அறை இலக்கம் 2/218, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு - 07' என்ற முகவரிக்கு முறைப்பாடுகள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விசாரணைக் குழுவுக்கு ஓய்வு பெற்ற விமானப்படைத் தளபதி எயார்வைஸ் மார்ஷல் ஹரிகுண திலக தலைமை தாங்குகிறார். ஒலிவர் வீரசிங்க,விவேகானந்தன் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் எதிர்வரும் 30 ஆம் திகதி தமது அறிக்கையை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் சமர்ப்பிப்பர். (ஐ-12)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களம் நடத்தும் 13 வயதுப் பிரிவு உதைபந்தாடடச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினமும் கௌரவ விருந்தினராக விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் ம.சிவசிதம்பரம், வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் இ.தயா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலையை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி மோதவுள்ளது.

இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் விளையாடவுள்ளது. (ஐ-12)

## உதைபந்தாட்ட பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இறுதி ஆட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் 14,16,18 வயதுக்குட்பட்ட 12 அணிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-5-86)

# டக்ளஸ் விசாரிக்கப்பட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைச் சுட்டுக் கொன்றார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

உலக ஊடக அமைப்பான ஆர். எஸ்.எப். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் நிமலராஜன் கொலை தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பெயர் நிமலராஜனுக்கு மிகவும் நெருக்கமான பலரால் தமக்குத் தெரிவிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முன்னைய அரசாங்கத்தில் டக்ளஸ் தேவானந்தா வடக்கு புனர்வாழ்வு மற்றும் தமிழ் அலுவல்கள் அமைச்சராகப் பதவி வகித்தார்.

டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி. டி.பி. ஓர் ஆயுதக்குழுவாக இருந்து இலங்கை ஆயுதப்படைகளுடன் இணைந்து பணியாற்றிவந்தது. இந்த ஆயுதக் குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நெருங்கிய நட்புறவு பூண்டிருந்தது.

இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் நிமலராஜன் படுகொலை தொடர்பாக விசாரணை செய்யப்படுவார்கள் என்று பொலீஸ் விசாரணையாளர்கள் ஆர். எஸ்.எவ்விடம் தெரிவித்திருந்தனர். எனினும், அதை இதுவரை அவர்கள செய்யவில்லை என்றும் ஆர்.எஸ்.எப. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறது.

விசாரணைகள் நத்தை வேகத்தில் நடைபெறுகின்றன என்றும் ஆர். எஸ்எப் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

# மானுடத்தின் தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணி வரை தொடக்க நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் கி.பாப்பா தேசியக் கொடியை ஏற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் கொடிக் கீதம் இசைப்பர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஈகச்சுடரையும் முன்னாள் எம்.பி சி.சிவமகராஜா விழாச் சுடரையும் ஏற்றுவர்.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வரவேற்புரை வழங்குவார். சீ.வி.கே. சிவஞானம் தலைமையுரையாற்றுவார்.

தொடக்க உரையை தமிழறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அளிப்பார். தொடர்ந்து நிலாந்தனின் சிறப்புரை இடம்பெறும்.

முற்பகல் 11.00 மணிமுதல் 12.30 மணிவரை கவிதை அமர்வு கவிஞர் சண்முகம் சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

"ஈழத்துக் கவிதையில் தமிழ் இன, மொழி உணர்வுக்கான அடித்தளங்கள் - 1970இற்கு முற்பட்ட கால கட்ட குறித்த ஒரு நோக்கு" என்ற தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதனும் -

'எழுபதுக்குப் பின் ஈழத்துத் தமிழ்க் கவிதை - பண்பியல் மாற்றங்கள் தொடர்பான பார்வை' என்னும் தலைப்பில் கவிஞர் சு.வில்வரத்தினமும் - கட்டுரை வழங்குவார்.

பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை சிறுகதை பற்றிய அமர்வு எழுத்தாளர் செம்பியன் செல்வன் தலைமையில் இடம்பெறும்.

'தேசிய இனப்பிரச்சினையும் ஈழத்துச் சிறுகதைகளும்' என்ற தலைப்பில் தெளிவத்தை யோசப், தாமரைச் செல்வி ஆகியோரும் -

'விடுதலை நோக்கிய ஈழத்துச் சிறுகதை இலக்கியம்' என்னும் தலைப்பில் இராஜதர்மராஜாவும் - கட்டுரை படிப்பார்.

எஸ்.எல்.எம்.ஹனீபா, முல்லைக் கோணேஸ் ஆகியோரின் குறிப்புரைகளும் இடம்பெறும்.

குழந்தைகள் இலக்கியம் பற்றிய அமர்வு பிற்பகல் 3.30 மணிமுதல் 5.00 மணிவரை கலாநிதி சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

'குழந்தை இலக்கியத்தின் உளவியற் தளம்' என்னும் தலைப்பில் சபா. ஜெயராசாவும், 'ஈழத்துக் குழந்தை இலக்கியம் - இன்றும் இனியும்' என்ற தலைப்பில் செ.யோகநாதனும் கட்டுரை வழங்குவார்.

ஓ.கே.குணநாதன் குறிப்புரை வழங்குவார்.

பிற்பகல் 5.00 மணிமுதல் 5.30 மணிவரை தமிழக கவிஞர் இன்குலாப சிறப்புரையாற்றுவார்.

தொடர்ந்து நிறைவுரையை தமிழினி வழங்குவார்.

மாலை 6.00 மணிமுதல் புதுவை அன்பனின் நெறியாள்கையில் 'கரை தேடும் ஓடங்கள்' என்ற நாடகம் இடம்பெறும். (ஐ)

# கிளர்ச்சியாளர்கள் - படையினர் கொலம்பியாவில் தீவிர மோதல்!

## 25 பேர் பலி; மேலும் 25 பேர் காயம்

மெடிலின்,ஒக்.19

கொலம்பியாவின் இரண்டாவது பெரிய நகரான மெடிலினில் அரச படையினருக்கும் இடதுசாரி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற தீவிர சண்டையின் இடையில் சிக்கி 25இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்; மேலும் 25பேர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களிலும் காயமடைந்தவர்களிலும் பெரும்பாலானவர்கள் சாதாரண பொதுமக்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மெடிலின் நகர்ப்பகுதியைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் இருந்து இடதுசாரிக் கிளர்ச்சியாளர்களை வெளியேற்றும் இராணுவ நடவடிக்கையை அரச படையினர் ஆரம்பித்த பின்னரே இந்தச் சண்டை மூண்டது. 3ஆயிரம் இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

கடந்த புதனன்று அதிபர் அல்வாரோ உருபி இந்த இராணுவ நடவடிக்கைக்கு பச்சைக்கொடி காட்டி இருந்தார். அதனைத் தொடர்ந்தே தற்போதைய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கை எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பதை நேரில் கண்காணிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சர் மர்தா லூஸியா ரமிரஸ் சகிதம் அதிபர் உருபி தற்போது மெடிலின் வந்துள்ளார்.

இதுவரை கிராமப்புறங்களில் இருந்துவந்த கொரில்லாக்களின் நடவடிக்கைகள் தற்போது நகரங்களை நோக்கி நகர ஆரம்பித்துள்ளன. எனவே, அதனைக் கட்டுப்படுத்த கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

அதிபர் உருபி மெடிலினுக்கு வந்து சேர்வதற்கு முன்னதாக நகரில் இருந்த அலுவலகக் கட்டடம் ஒன்றில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. பொழுது புலர்வதற்கு முன்பே குண்டு வெடித்ததால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. அச்சமயம், அலுவலகத்தில் எவரும் இருக்கவில்லை.

நேற்று ஆரம்பமான இராணுவ நடவடிக்கையின்போது தாம் 100இற்கும் மேற்பட்ட சக்திவாய்ந்த வெடிபொருள்களைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலீஸார் கூறுகின்றனர். நகரின் மூன்று வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தேடுதலின்போது கிளர்ச்சியாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 9 பேர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் மட்டும் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடந்த மோதல்களில் 300 முதல் 400 வரையானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



காயமடைந்த 4 வயதுச் சிறுமி மீட்கப்படுகிறாள்.

### ஜமைக்கா தேர்தலில் ஆளும்கட்சி வெற்றி!

கிங்ஸ்டன்,ஒக்.19

மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான ஜமைக்காவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் மக்கள் தேசிய கட்சி வெற்றிபெற்றுள்ளது.

60 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சி 35 இற்கும் மேற்பட்ட இடங்களைக் கைப்பற்றி பெரு வெற்றிபெற்றது.

தற்போதைய பிரதமர் பேட்டர் சனே மீண்டும் ஆட்சிக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தேசியக் கட்சி தொடர்ச்சியாகப் பெறும் 4ஆவது வெற்றி இதுவாகும்.

இந்தத் தேர்தலையொட்டி நடந்த வன்முறைகளில் 7 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ம)

### பிலிப்பைன்ஸ் குண்டு வெடிப்பில் 5பேர் பலி!

மணிலா,ஒக்.19

பிலிப்பைன்ஸின் தெற்கு நகரான சம்பொன்காவில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து இடம்பெற்ற இருகுண்டு வெடிப்புக்களில் 5பேர் கொல்லப்பட்டனர்; மேலும் 144பேர் காயமடைந்தனர்.

நன்கு திட்டமிடப்பட்டே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதற்கு அபு சயுப் தீவிரவாதிகளே காரணம் என்றும் பொலீஸார் கூறினர்.

இந்தோனேஷியாவின் பாலிக்குடாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் 180இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

### இஸ்ரேலியரின் தாக்குதலில் 8 பலஸ்தீனர் பலி!

காஸா,ஒக்.19

இஸ்ரேலியப் படையினர் டாங்கிகளில் இருந்து நடத்திய தாக்குதலில் இரு சிறுவர்கள் உட்பட 8 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

டாங்கிகளை நோக்கி ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்தே தாம் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது. காஸாவின் ரபா நகரில் வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் அவசரப் பேச்சுக்களை நடத்திய ஒரு நாளின் பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம)

### ஆஸ்திரேலியா எச்சரிக்கை!

சிட்னி,ஒக்.19

இந்தோனேஷியாவில் தீவிரவாதத் தாக்குதல்கள் மேலும் நடக்கலாம். எனவே, தீவிரவாதத்துக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தோனேஷிய அரசு உறுதி கொள்ளவேண்டும் என்று எச்சரித்துள்ளார் ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட்.

கடந்த சனிக்கிழமை இந்தோனேஷியாவின் பாலி குடாவில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் பேசியபோதே ஹவார்ட் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை -

மேற்குலக நாடுகள் இந்தோனேஷியாவில் இருந்து தமது பிரஜைகளை வெளியேற்றும் பணிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன. எதிர்காலத்தில் இந்தோனேஷியாவுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அவை தமது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளன. (ம)

### அமெரிக்காவே காரணம்

ஈராக் அதிபராகத் தான் இன்னும் 7 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டுமா? இல்லையா? என்று நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் தான் 100 வீத ஆதரவைப் பெறுவதற்கு அமெரிக்காவே காரணம் என்று சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

"ஈராக்மீது போர் தொடுப்போம்" என்று அமெரிக்க மிரட்டியதால்தான் எனக்கு அமோக ஆதரவு கிடைத்தது என்றார் சதாம் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் தனது தளபதிகளிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஈராக் மக்களுக்கு தலைமை ஒன்றுதான் என்று இந்தத் தேர்தல் நிரூபித்துவிட்டது என்றும் அவர் சொன்னார். (ம)

### அமெரிக்க உளவு விமானம் வீழ்ந்து நொறுங்கியது

இஸ்லாமாபாத்,ஒக்.19

அமெரிக்காவுக்குச் சொந்தமான ஆள் இல்லா விமானம் ஒன்று பாகிஸ்தானில் விழுந்து நொறுங்கியுள்ளது. பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதி வான்வெளியில் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது ஜக்கோபாத் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் விமானம் வீழ்ந்து நொறுங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் பாகங்களை மீட்கும் முயற்சியில் அமெரிக்க, பாகிஸ்தான் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (ம)

# ஈராக் விவகாரத்தில் இணக்கம்

நியூயோர்க்,ஒக்.19

ஈராக் மீது இராணுவ நடவடிக்கைக்கு வழிவகுக்கும் ஐநாபிரேரணை மீதான விவாதத்தில் ஓர் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் இணங்கியுள்ளன.

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் ஈராக் முழுமையாக ஒத்துழைக்கவில்லை என்றால் அதன் மீது தெளிவானதும் உடனடியானதுமான நடவடிக்கை மேற்கொள்ள வழிவகுக்கும் புதிய பிரேரணை ஒன்றை அமெரிக்கா மிகவிரைவில் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கவுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான ரஷ்யா, சீனா, பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளினதும் இணக்கத்துடன் இந்தப் புதிய பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. இதற்காக இந்த ஐந்து நாடுகளினதும் ஐ.நா. பிரதிநிதிகள் நேற்று, வெள்ளிக்கிழமை கூடி ஆராய்ந்தனர்.

தற்போது அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட பிரேரணை ஆயுதக் கண்காணிப்புக்கு சரிவர ஒத்துழைக்காவிட்டால் ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வழிவகை செய்கிறது. ஆனால், அதற்கு பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நிரந்தர உறுப்பு நாடுகளும் ஏனைய பல நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதனால் அந்தப் பிரேரணையைத் தவிர்த்து, வேறு புதிய பிரேரணையை நிரந்தர உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முழு முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை ஏற்படின் அதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இரண்டாவது பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படவேண்டும் என்ற அம்சம் இணைக்கப்படவேண்டும் என்று பிரான்ஸ் வற்புறுத்தி வருகின்றது. ஆனால், ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது தொடர்பான விடயத்தில் தளர்வைக் கடைப்பிடிக்க அமெரிக்கா இணங்கியுள்ளபோதும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒரே பிரேரணையிலேயே அதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று அது கூறுகின்றது.

இருப்பினும், இந்த விடயத்தில் பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவின் ஆதரவை அமெரிக்கா வென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

### உலக அரங்கில்

### ஈராக் மீது போர்; அமெரிக்காவுக்கு குவைத்தும் எதிர்ப்பு

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நடந்த விவாதத்தில், ஈராக்மீது போர் தொடுப்பதற்கான பிரச்சினையில் அமெரிக்காவும், இங்கிலாந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

எந்த நாட்டை ஈராக்கின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிப்பதற்காக அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்ததோ, அந்தக் குவைத்தும் இப்போது அமெரிக்காவை எதிர்த்துள்ளது. ஈராக் மீது போர்தொடுப்பது என்ற அமெரிக்காவின் திட்டத்தை அது எதிர்த்துள்ளது.

அமெரிக்காவின் நட்பு நாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவையும்கூட அமெரிக்காவின் முடிவை ஆதரிக்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவை எதிர்த்துள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளில் அமெரிக்காவின் நட்பு நாடாக இருக்கும் ஜோர்டானும் ஈராக் மீதான போர் உலகை அமைதிக்கு ஊறு விளைவிக்கும் என்று கூறியுள்ளது. (ம)

# இத்தாலி தொழிற்சங்கம் நேற்று வேலைநிறுத்தம்

## போக்குவரத்து முற்றாக முடக்கம்

ரோம்,ஒக்.19

இத்தாலியில் தொழிற்சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சியைக் கண்டித்து இத்தாலியின் மிகப்பெரும் தொழிற்சங்கம் ஒன்று நேற்று பெருமெடுப்பில் நடத்திய 8 மணிநேர வேலை நிறுத்தத்தால் அந்த நாட்டின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்தது.

பல கோடிக்கணக்கான இத்தாலியர்கள் போக்குவரத்து வசதிகள் ஏதும் இல்லாமல் அவதிப்பட்டனர். இதனால், இத்தாலியின் நாளாந்தப் பணிகள் முடங்கின.

இந்த வேலைநிறுத்தத்தில் விமான, ரயில், பஸ் ஊழியர்கள் அனைவரும் ஈடுபட்டதால் இத்தாலியர்கள் பலர் நேற்றுத் திட்டமிட்டிருந்த வேலைகள் அனைத்தும் முழுமையாகத் தகர்க்கப்பட்டன.

புதிய தொழிற்சட்ட தொழிலாளர் உரிமைகளைப் பாதிப்பதாக தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால், சிறிய தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் வகையிலேயே தொழிற்சட்டம் திருத்தப்படுவதாக இத்தாலிய அரசு கூறுகின்றது.

அரசின் இந்த முயற்சி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பதற்குக் காரணமாகிவிடும் என்று தொழிற்சங்கங்கள் அஞ்சுகின்றன.

நேற்று நடைபெற்ற வேலைநிறுத்தம் இந்த ஆண்டில் இத்தாலியில் நடைபெற்ற இரண்டாவது மிகப்பெரிய வேலைநிறுத்தம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இத்தாலியில் புதிய தொழிற்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளதை கண்டித்து அங்குள்ள பெரிய கார் உற்பத்தித் தொழிற்சாலை ஊழியர்கள் வியாழனன்று நடத்திய பேரணி.

# ரஷ்யாவில் ஆளுநர் நேற்று சுட்டுக்கொலை

ரஷ்யாவின் கிழக்குப் பகுதிக்கான ஆளுநர் வலன்டின் டெவற்கோவ் மொஸ்கோவின் மத்திய பகுதியில் வைத்து நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மத்திய மொஸ்கோவிலுள்ள வர்த்தக நிறுவனத் தொகுதி ஒன்றில் வைத்து உள்ளூர் நேரப்படி காலை 9.15 மணிக்கு அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலீஸார் கூறினர்.

காரில் வந்த இருவரே அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடியதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

ரஷ்யாவின் மஹடான் பிரதேசத்தின் ஆளுநராக 1996 முதல் டெவற்கோவ் பணியாற்றி வந்தார். இவர் எதற்காகக் கொலைசெய்யப்பட்டார் என்ற விவரம் தெரியவரவில்லை.

கடந்த இரு மாதங்களில் கொல்லப்படும் இரண்டாவது ரஷ்ய அரசியல்வாதி இவராவார். கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி நாட்டின் மூத்த அரசியல் வாதியான விளாடிமிர் கொலோலிவ் கொல்லப்பட்டார். (ம)

# வடகொரியாவிடம் அணுகுண்டுகள்

வாஷிங்டன்,ஒக்.19

வடகொரியா சிறிய எண்ணிக்கையில் அணுகுண்டுகளைத் தயாரித்து வைத்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனல்ட் ரம்ஸ்பெல்ட் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறைந்தது இரண்டு அணுகுண்டுகளாவது வடகொரியா வசம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடகொரியாவின் இந்தச் செயல், கிளிங்டன் ஜனாதிபதியாக இருந்தபோது அமெரிக்காவுடன் அந்த நாடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் செயல் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

"வடகொரியா அணு ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக அந்த நாட்டுக்கு பெற்றோல் மற்றும் அணு சக்தியால் இயங்கும் ரீயாக்டர் போன்றவற்றை அமெரிக்கா வழங்கும்" - இதுதான் 1994இல் வடகொரியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட ஒப்பந்தம்.

ஆனால், இந்த ஒப்பந்தத்துக்கு முரணாகத் தாம் அணுகுண்டுகள் தயாரித்ததை வடகொரிய அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். அண்மையில் வடகொரியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க உயர் அதிகாரிகள் குழு ஒன்றிடமே அவர்கள் இந்த உண்மையை ஒத்துக்கொண்டனர். அமெரிக்கர்களுக்கு இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இந்தப் பிரச்சினைக்கு இராஜிய ரீதியிலான தீர்வு காணப்படவேண்டும் என்று அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். ஈராக் விடயத்தை விட வித்தியாசமான முறையில் இந்த விடயத்தை கையாளவே புஷ் விரும்புகிறார் போன்று தோன்றுகின்றது. (ம)

## மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

எமது ஆலய பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ ஞான சபாரட்ண சர்மா** அவர்களின்
கனிஷ்ட புத்திரர்
**பிரம்மஸ்ரீ உமாபதி சர்மா** அவர்கள்
13.10.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற
யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி (B.A.)

பட்டம் பெற்றமையையிட்டு எமது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு அவர் மேலும் கல்வியில் மேன்மையுற்று சைவத்திற்கும் தமிழுக்கும் நற்பணியாற்ற எல்லாம்வல்ல சிவகாமியம்மை சமேத ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரரின் நல்லருளாசி கிடைக்கப் பெற எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

- பரிபாலனசபையினர்.

ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலயம்,
சித்தன்கேணி.
(9643)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



15-10-2002 ஞாயிற்றுக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த
22 ஆவது பட்டமளிப்பு விழாவில்
கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற
**திரு.ப.மணிவண்ணன் B.A.(Hons)**
அவர்களைப் பாராட்டுகின்றோம்.

அதே பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றவர்களான திரு.பி.மணிவண்ணன், திரு.கே.செந்தில்நேசன், திரு.கே.கரண்டீபன், திரு.கே.யோகநாதன், திரு.எஸ்.சுபாஸ், திரு.கே.சதீஸ் ஆகியோரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

திரு.ப.மணிவண்ணன்
B.A. (Hons)

யாழ். பல்கலைக்கழக
நண்பர்கள்
(C/24313)



## சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்

மூளாய், சுழிபுரம்.

### ஊக்குவிப்பாளர்களுக்கான சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சிப்பட்டறை - 3 மாதங்கள்

எம்மால் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சிநெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22.10.2002 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் (பொன்னம்பலம் வார்ட்) உள்ள எமது பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. தகைமையும் விருப்பமும் உள்ளோர் குறித்த நேரம் தங்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில்வரவும். எமது திட்டங்களில் சேவையாற்றும் தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*தகைமைகள்:*

- ✦ வலி.மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வசித்தல் வேண்டும்.
- ✦ க.பொ.த உயர்தரம் அல்லது க.பொ.த. சாதாரணத்தில் சித்தியுடன் ஏதேனும் நிறுவனங்களில் சமூக அபிவிருத்தி நடவடிக்கையில் பங்குபற்றிய முன் அனுபவம் அல்லது முன்பள்ளி ஆசிரியர்/மகிழ்வாய் கற்றும் வகுப்பு ஆசிரியர்.
- ✦ சமூக அபிவிருத்தி, சமூக சேவையில் ஆர்வம்.

தா.இராஜேஸ்வரன்,
தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர்.

மூளாய், சுழிபுரம்.
(9602)



## வாழ்வகம்
## விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

### சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமும் கலை விழாவும்

*இடம்:* யா/இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபம்
*காலம்:* 2002.10.20 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
*தலைவர்:* திரு.ஆ.இரவீந்திரன் அவர்கள் (B.A., Dip.in Ed, M.Ed.)
(உபதலைவர், வாழ்வகம்;
ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)
*ஆசியுரை:* செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன்
(ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
செல்வி அ.சின்னத்தம்பி (நிர்வாகி, வாழ்வகம்)
*பிரதம விருந்தினர்:*
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)
*கௌரவ விருந்தினர்:*
திரு.நா.வேதநாயகம் (பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு.சுப்புண்ணியசீலன் (அதிபர், யா/யூனியன் கல்லூரி)
திருமதி ஆ.சிவஞானசுந்தரம்
(அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)
*கலைநிகழ்ச்சி:*
வாழ்வகச் சிறார்களும் உதவுவோரும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம்.*

வாழ்வகச் சமூகம்,
வாழ்வகம்.
(9621)


## முழுநிலாநாள் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.19

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் முழுநிலாநாள் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பண்டிதர் கந்தையா அரங்கில் அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் இளைப்பாறிய ஆசிரியர் பொ.கந்தையா பிரதம விருந்தினராகவும், பழைய மாணவர்களான வி.குமாரசாமி, க.சோமாஸ்கந்தமூர்த்தி, திருமதி சிவாஜினி செல்லத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

பிரபல எழுத்தாளரும் நாவலாசிரியருமான கா.சொக்கலிங்கம்(சொக்கன்) இவ்விழாவில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார். (எ-173)

## பரிசளிப்பு விழா

நீர்வேலி,ஒக்.19

நவக்கிரி அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை பிப ஒரு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.பகவத்சிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு வலி.கிழக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் பிரதமவிருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், இளைப்பாறிய அதிபர் ஆ.செல்லத்துரை ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-110)

★ ★ ★

நீர்வேலி,ஒக்.19

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்தப் பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் சிறப்புவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, அச்சுவேலி ப.நோ.கூ.ச. பொது முகாமையாளர் தகவீந்திரதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-110)

★ ★ ★

கரவெட்டி,ஒக்.19

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நூற்றாண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளன.

மேற்படி வித்தியாலய பழைய மாணவரான யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-70)


## தேவை

தரமான பழைய, புதிய வீடியோ பிரதிகள் நியாயமான விலையில் உடன் தேவை. வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**திரு.J.கோபி**
T.P No:021-2222463
(9634)



## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் ஐப்பசித் திங்கள் 4ஆம் நாள் (21.10.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணிமுதல் 1.15 மணிவரையுள்ள சுப முகூர்த்த நல்வேளையில்

### ஐங்கரன் வெதுப்பகம்

என்னும் வெதுப்பக ஸ்தாபனத்தை கோப்பாய், பருத்தித்துறை வீதியில் ஆரம்பித்து நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளமையால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவரும் வருகை தந்து திறப்புவிழாவில் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்து எம்மை மகிழ்வித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
077 - 110105. (9569)

*தங்கள் வரவை விரும்பும்:*
திரு.இ.பொன்குமார்
சிகானு வீதி, முழங்காவில்.



## ஓராண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 03 - 1951 | 29 - 10 - 2001 |

**அமரர் சண்முகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா**
(போட்டோ ஸ்ரீ)

ஓராண்டின் நினைவு நாளாகிய இன்று (19-10-2002) சனிக்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
(9603)

பிரிவால் துயருறும்:
இ.உதயகுமார்
(உதயன் போட்டோ)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 - 03 - 1947 | 30 - 10 - 2001 |

**அமரர் பொன்னையா அம்பிகைபாகன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)
விழிசிட்டி - தெல்லிப்பழை
திதி: 19-10-2002

மனை வாழ்வில் பத்தாண்டு
மகிழ்வாக வாழ்ந்தோமே - நீங்கள்
மறைந்தின்று ஓராண்டு
ஓடி மறைந்ததையா!

எந்நாளும் உங்களையே
எண்ணித் தொழுகின்றோம்.

"புனிதவாசம்"
பத்தாவத்தை,
இளவாலை.
(9592)

அ.பூமலர் (மனைவி),
அ.சுகந்தினி, அ.தயாளினி.
(பிள்ளைகள்),



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

இல. 70, கஸ்தூரியார் வீதி... கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இதுவரை இயங்கிவந்த....

## சாருணி ஜுவல் கட்டிங் வேக்

நிகழும் சித்திரபானு வருடம் ஐப்பசி 2ஆம் திங்கள் இன்று (19.10.2002) சனிக்கிழமை காலை 10.30 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

இல.74, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

புதுப் பொலிவுடன்....
சாருணி ஜுவல் கட்டிங் வேக்

என்னும் முகவரியில் எம்மால் இடம்மாற்றப்படவுள்ளது என்பதனை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தரும் அதேவேளை.... தாங்கள் அனைவரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.74 கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம். (9618)

திரு. பா.கேதீஸ்வரன்.
உரிமையாளர்

உதயன்

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பற்றிய நீதிமன்றத் தீர்ப்பு

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் சமீபத்தில் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஆண்டுக்கணக்காக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள தீர்ப்பு அது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செயயப்பட்ட ஒருவரிடமிருந்து பெற்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சாட்சியமாக வைத்துக் கொண்டு அந்த நபரைக் குற்றவாளியாக்க முடியாது என்பதே உயர்நீதிமன்றத் தீர்ப்பு.

யாழ்ப்பாணம், கட்டுவனில் படையினர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற சந்தேகத்தின்பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட நாகமணி தெய்வேந்திரன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைச் சாட்சியமாகக் கொண்டு அவர் மீது குற்றஞ்சுமத்தி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

1997 ஜனவரி 20ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்த்தன குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொண்டு நாகமணி தெய்வேந்திரனை குற்றவாளியாகக் கண்டு அவருக்கு ஏழு ஆண்டுகாலச் சிறைத்தண்டனை விதித்தார்.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டபோது அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த இரண்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனு மீது விசாரணை நடத்திய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, எஸ்.விக்னேஸ்வரன், அமீர் இஸ்மாயில் ஆகியோரே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சாட்சியமாக வைத்துக்கொண்டு அவரைக் குற்றவாளியாக்கமுடியாது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கினர்.

இலங்கையின் நீதித்துறைக்குப் பெருமை சேர்க்கும் இந்தத் தீர்ப்பு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு ஆண்டுக்கணக்காக சிறையில் கிடந்து சித்திரவதைகளைக் கூட அனுபவித்து வரும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பலருக்கு விடுதலையையும் புது வாழ்வையும் அளிக்கப் பெரிதும் உதவும்.

கைதுசெய்யப்பட்டவர்களை குற்றவாளிகளாக்குவதற்கு ஆதாரம் எதுவும் இல்லாத நிலையில் அவர்களிடமிருந்து எப்படியும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர்கள் நீண்டகாலம் சிறையில் வைத்துத் துன்புறுத்தப்படுகின்றார்கள்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் இருந்து பயனில்லை என்பது உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தெரியவந்துவிட்டதால், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறும் நடவடிக்கை ஒன்றில் முற்றாக நின்றுவிடும் அல்லது குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் பலர், அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து பயனில்லை என்ற நிலையில் விடுதலை செய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சியமாக அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுந்தான் இருக்குமானால் அடுத்த தவணை விசாரணையின்போதே அவர்கள் மறுபேச்சின்றி நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுவிடுவார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் மிகவும் கொடுமையானது. அதை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தவரே ஒரு தமிழ் அமைச்சர் தேவநாயகம்தான். சட்டத்தை எதிர்த்து தமிழ் எம்.பிக்கள் எவரும் அப்போது மூச்சுக்காட்டவில்லை. அது ஒரு சோகவரலாறு.

இரண்டு வருடங்களுக்கு மட்டும் என்று கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் இரண்டு வருட முடிவில் நிரந்தர சட்டமாக்கப்பட்டுவிட்டது.

இந்தச் சட்டத்தை நீக்குமாறு இப்போது தமிழர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. ஆனால், அதற்கு அரசு இணங்குவதாக இல்லை. வேண்டுமானால் சில திருத்தங்களை மட்டும் செய்யலாம் என்கிறது அரசு.

இந்த நிலையில்தான் உயர் நீதிமன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. அது நோய்க்கு நிவாரணம் அல்ல என்றாலும் நோயை வெகுவாகத் தணிக்கும் சக்தி படைத்தது.

# மக்கள் செறிந்து வாழும் இடங்கள் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களா?

### ஏற்கவே முடியாது என்கிறார் மாவை எம்.பி.

செம்பியன்பற்று,ஒக்.19

மக்கள் செறிந்து வாழும் இடங்களை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இராணுவம் வைத்திருப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது.

- இவ்வாறு நாகர்கோயில் மீளக் குடியேற்றம் சம்பந்தமாக கடந்த திங்கட்கிழமை தும்பளை இலட்சுமணன் தோட்ட பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறினார். இக்கலந்துரையாடல் நாகர்கோயில் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் இ.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மாவை சேனாதிராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

கடற்றொழில் வளம் நிறைந்த மக்கள் செறிந்து வாழும் இடங்களை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இராணுவம் வைத்திருப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது. இது சம்பந்தமாக பிரதேச மட்டத்திலான இராணுவ உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு கலந்துரையாடலை மிக விரைவில் ஒழுங்குசெய்ய இருக்கிறேன். அதன் முடிவைப் பொறுத்து நாகர்கோயில் மீள் குடியேற்றம் சாத்தியப்படாவிட்டால் வீடுகளை பார்ப்பதற்கு முதல்கட்ட அனுமதி பெறமுயற்சிப்பேன்.

முகாம்களில் வாழ்கின்ற மக்களின் குறைகளை அரசசார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி அவர்களுக்கு சில உதவிகளைச் செய்யமுயற்சிப்பேன். இது சம்பந்தமாக கூட்டமைப்பு நாடாளுமன்ற அங்கத்தவர்களுடனும் முக்கியமாக நாடாளுமன்ற அங்கத்தவர் க.சிவாஜிலிங்கத்துடனும் தொடர்புகொண்டு இப்பகுதி மக்களுக்கு உதவிகளைச் செய்ய முயற்சிப்பேன் - என்றார். (ம-ரி-173)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இரவுவேளை தாக்கப்பட்டார்

கடமையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரை பின்தொடர்ந்து சென்ற இரு அடையாளம் தெரியாத நபர்கள் வழிமறித்து பொல்லுத்தடியால் அடித்துத் தாக்கிவிட்டுத் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 11 மணிக்கு நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், பிறவுண் வீதிப் பகுதியைச் சேர்ந்த யாழ்.போதனா வைத்தியசாலைப் பொதுப் பரிசோதகரான சி.முரளீதரன் என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரவுவேளைகளில் தொந்தரவு கொடுத்த கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கையை சம்பவதினம் இரவு மேற்கொண்டுவிட்டு வீடு திரும்பிய சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் தன்னை மறித்த இருவர் தமது வளர்ப்பு நாய்க்கு நஞ்சூட்டிக் கொன்றுவிட்டதாகத் தெரிவித்து தன்னை விசாரித்தாகவும் -

ஆஸ்பத்திரி வளவுக்குள் நின்ற நாய்களையே அவ்வாறு அழித்ததாகவும் நாயைக் கட்டி வளர்க்காததற்குத் தான் பொறுப்பாளி அல்ல எனத் தெரிவித்து அவ்விடத்தைவிட்டு புறப்பட்டுச் சென்றவேளை, பின் தொடர்ந்துவந்த அவர்கள் தன்னைத் தாக்கியதாகவும், சுகாதாரப் பரிசோதகரால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளரிடமும், யாழ்.பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-15)

## ஆஸ்பத்திரி படுகொலைகளின் 15ஆவது ஆண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து 1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 21 உத்தியோகத்தர்களின் 15ஆவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமையும், 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இருதினங்களும் சமயவழிபாடுகள், நினைவுரைகள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-139)

## விலை மதிப்பீடுகள் குறித்து மக்கள் ஒத்துழைப்புத் தேவை

### என்கிறார் திணைக்கள அதிகாரி

யாழ்ப்பாணம்,ஒக்.19

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். அதன் மூலமே எமது நடவடிக்கைகள் வெற்றிகரமானவையாக அமைய முடியும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பா.பாலேந்திரன்.

இது தொடர்பாக தகவல் தருகையில் அவர் மேலும் கூறியதாவது:-

எமது திணைக்களம், காணி, கட்டடம் தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இவற்றின் பெறுமதிக்குரிய 'இறைவரி' மற்றும் 'முத்திரைவரி' போன்ற அறவீடுகள் காரணமாக, நடைமுறையில் உள்ள சரியான மதிப்பீட்டைப் பொதுமக்கள் எமக்கு அறியத்தருவதில்லை.

பொதுமக்களின் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக, குறித்த ஓர் இடத்தில் சரியான மதிப்பீடுகளை மேற்கொள்வதில் நாம் இடர்பாடுகளை எதிர்கொள்ளவேண்டி நேரிடுகிறது. இதனால், பாதிக்கப்படுவதும் பொதுமக்களே! அவர்கள் எமக்கு சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைப்பதன்மூலமே எமது பணிகள் பூரணத்துவம் வாய்ந்தவையாக அமையும்.

மேற்படி நடைமுறைப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் விரைவில் யாழ்ப்பாணத்திலும் 'காணி உரித்துப் பதிவுச் சட்டம்' கொண்டுவரப்படவுள்ளது.

தற்போது, கொழும்பு மாவட்டத்தில் மட்டுமே மேற்படி சட்டம் நடைமுறையில் உள்ளது - என்றார் அவர். (எ-ஜ),

### நாளை

ஐப்பசி 03,
ஞாயிற்றுக்கிழமை
(20.10.2002)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.16 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முழுவதும்.
பூரணை விரதம்.
சுபநேரம் : 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

## அறுபதாயிரம் மக்கள் பார்வையிட்ட கண்காட்சி

மட்டக்களப்பு,ஒக்.19

மட்டக்களப்பில் நான்கு நாள்களாக நடைபெற்ற பொருண்மிய காண்காட்சியை 60ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

1963ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற பிரமாண்டமான கண் காட்சி இதுவாகும். இதில் 52 திணைக்களங்கள், நிறுவனங்கள் கலந்துகொண்டன. கண்காட்சியில் கலந்துகொண்ட திணைக்கள - நிறுவனத் தலைவர்களுக்குப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் கையொப்பமிட்ட பாராட்டுக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 'எமது தேசிய வளத்தைப் பாதுகாக்க தேசியத் தலைவரின் வழிகாட்டலின் கீழ் அனைவரும் ஒன்றுபடவேண்டும். இவ்வரிய பணியில் பங்குகொண்ட உங்களைப் பாராட்டுகின்றேன்' - என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ம)

## சாவகச்சேரி இந்துவில் தளபாடப் பற்றாக்குறை

### கல்வி கற்க முடியாது மாணவர் சிரமம்

தென்மராட்சி,ஒக்.19

தேசியப் பாடசாலைகளில் ஒன்றான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தளபாடப் பற்றாக்குறையினால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்பட்டது.

மேற்படி கல்லூரி இடம்பெயர்ந்து இணுவிலில் இயங்கிய வேளையில் கல்வித் திணைக்களம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் ஆகியவற்றின் தளபாடங்களை பாவனைக்கென வழங்கியிருந்தது.

மேற்படி பாடசாலைகள் மீள இயங்கத் தொடங்கியதையடுத்து அவற்றின் தளபாடங்கள் மீளவும் சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுவிட்டன.

கல்லூரியின் அலுவலகத் தளபாடங்கள் காணாமற்போனதை அடுத்து அலுவலக உத்தியோகத்தர்கள், அதிபர், உபஅதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வலய அலுவலகத்திலிருந்து கடனாகப் பெற்ற தளபாடங்களையே பயன்படுத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### ஆனந்தன்வடலி வீதிப் பகுதி மக்கள் கோரிக்கையையடுத்து

## அரியாலையில் படையினர் கண்ணிகள் அகற்றுகின்றனர்

அரியாலை ஆனந்தன்வடலி வீதியில் உள்ள தனியார் காணிகளில் இருக்கும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் இராணுவ மிதிவெடி அகற்றும் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஏழு வருடங்களாக மூடப்பட்டுக்கிடந்த இவ்வீதி, மிதிவெடிகள் அகற்றப்பட்டு கடந்தவாரம் பொதுமக்களின் பாவனைக்கு இராணுவத்தால் திறந்துவிடப்பட்டது.

இதனையடுத்து, இந்த வீதியில் இருக்கும் வீடுகளில் மீளக்குடியமர மக்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். கடந்த காலங்களில் இங்குள்ள வளவுகளில் நுழைந்த பொதுமக்கள் மூவர் மிதிவெடிகளில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளனர். அவ்வாறே மாடுகள் பலவும் தமது கால்களை இழந்துள்ளன.

இந்த நிலையில், இப்பகுதியில் தாம் மீளக்குடியமர்வதற்கு வசதியாக அப்பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றித் தருமாறு இராணுவத்திடம் கோரிக்கைவிடுத்தனர். அதனையடுத்து, இங்குள்ள காணிகளில் கண்ணிகளை அகற்றும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். (ம-96)

## மீளக்குடியமர்ந்தவர்களுக்கு விவசாய உபகரணங்கள்

### கட்டம் கட்டமாக 'கியூடெக்' வழங்கும்

மீளக்குடியமர்ந்துவரும் அதேவேளை, வறுமைக் கோட்டுக்குட்பட்ட சுமார் 150 விவசாய குடும்பங்களிற்கு, 'கியூடெக்' நிறுவனத்தினால் விவசாய உபகரணங்கள் வழங்கவுள்ளன' என நிறுவன இயக்குநர், அருட்தந்தை கி.போ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

இதன் முதல் கட்டமாக தீவுப்பகுதியில் உள்ள 50 குடும்பங்களுக்கும், இளவாலைப் பகுதியிலுள்ள 60 குடும்பங்களுக்கும் தலா 10ஆயிரம் ரூபா பெறுமதியான விதை வெங்காயம், விதை நெல், மண்வெட்டி, மற்றும் பசளை என்பன வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மேற்படி பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 15 குடும்பங்களுக்கு தெளிகருவி, நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் வழங்கவுள்ளன.

இந்த அடிப்படையில் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கான உபகரணம் வழங்குதல் இன்று இளவாலை சென்லூக் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-5),

## நன்றி நவிலல்

அமரர்

## மாதர் கோவிலான்

*(இளைப்பாறிய புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தரும், காத்தவராயன் நாட்டுக்கூத்து கலைஞரும்)*

கடந்த 2002.09.16ஆம் திகதியன்று சாவகச்சேரியில் காலமான எமது குடும்பத் தலைவன் அவர்களின் மரணச்சடங்கிலும், 2002.10.18ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற அந்தியேட்டிக்கிரியையிலும் கலந்துகொண்டவர்களுக்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*கச்சாய் றோட்,*
*சாவகச்சேரி.* (9613)

---


## மெய்யுரு Portrait

யாழ்ப்பாணத்தின்

ஆரம்பகாலப் புகைப்படங்களின் காட்சி

இடம்:- யாழ்பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடம்

காலம்:- இன்றும், நாளையும் 9 மணி முதல் 5 மணிவரை

முதுசம்-VIII கலைவட்டம், யாழ் பல்கலைக்கழகம்


---


## GUGAN STUDIO

*Photographers*

பருத்தித்துறை Point Pedro.


---




---

## 2ஆம் ஆண்டு நினைவு தினம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 09 |
| 03 | 11 |
| 1922 | 2000 |

### திருமதி பொன்னையா தங்கம்மா

திதி: 19.10.2002

இரண்டு ஆண்டு என்ன எத்தனை ஆண்டுகள்
தான் சென்றாலும் உம்மை நாம் மறப்போமோ?

*என்றும் தாய், தந்தையரின் நினைவுடன் வாழும்:*

பரமசாமி குடும்பத்தினரும்,
சகோதரர்கள் குடும்பத்தினரும்
(பிள்ளைகள்).

நிரந்தர முகவரி: *புலோப்பளை, பளை.*

தற்காலிக முகவரி: *61/2, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.*

(9393)

---

## கலந்துரையாடல்

அரச திணைக்களங்களுக்கு கூறு விலையில் தளபாடம் வழங்குபவர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் தளபாடங்களை கூறுவிலையில் வழங்குபவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஜ-ரி)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### ஆறுமுகம் வேலுப்பிள்ளை

(பாலிநகர், வவுனிக்குளம்)

19.09.2002 அன்று இறைபதம் எய்திய எமது கல்லூரி ஆசிரியை **செல்வி வே.மதிவதனி** (பகுதிநேர ஆங்கிலம்) அவர்களது அன்புத் தந்தையின் இழப்பால் துயருற்றிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இணுவில் மத்திய கல்லூரி.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

(9619)

---


## கோலாகலமான புதுப்புடைவைக் கடைத்திறப்புவிழா

* யாழ்.நகர மக்களின் மனம் மகிழ்ந்திட
* நவநாகரீக உலகில் நவயுகம் திகழ்ந்திட
* மங்கையரென்ன ஆடவரைக்கூட
கவர்ந்திழைக்கும் காட்சியறையுடன்
தங்கத் தாமரை தரணிமீது பொங்கிப் புடைசூழ
எங்கள் திருநாட்டில் தித்திப்பாய் எழுகின்றாள்!




அவளே.......... உங்கள்

### சுவேதா

சுவேதா சில்க்ஸ்........................ இது உங்கள் ஸ்தாபனம்
சுவேதா சில்க்ஸ்........................ இது உங்கள் இல்லம்
சுவேதா சில்க்ஸ்........................ இது உங்களின் உள்ளம்
சுவேதா சில்க்ஸ்........................ இதுவே உங்களின் தெரிவு

21.10.2002 திங்கட்கிழமை
பகல் 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுபவேளையில்

### சுவேதா சில்க்ஸ்

ஸ்தாபனத்தின் திறப்புவிழா வைபவம் இல.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நிகழ்வுறவுள்ளது. அனைத்து வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இத்தினத்திலிருந்து 21.10.2002 முதல் 04.11.2002 தீபாவளிப் பண்டிகைத் தினம் நண்பகல் 12.00மணிவரை விற்பனையாகும் புடைவைகளுக்கான விற்பனைச் சிட்டைகள் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.


*முதலாவது பரிசு* புத்தம் புதிய லுமாலா சைக்கிள்
*இரண்டாவது பரிசு* ரூபா 2000/= ரொக்கம் (வவுச்சர்)
*மூன்றாவது பரிசு* ரூபா 1000/= ரொக்கம் (வவுச்சர)

*இல.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.* (9555) - சுவேதா சில்க்ஸ் ஸ்தாபனத்தார்.


---

## முதலாண்டு நினைவஞ்சலி

| வரவு | | செலவு |
|---|---|---|
| தாய் மடியில் | | தாய் மண்ணில் |
| 28 | | 29 |
| 03 | | 10 |
| 1951 | | 2001 |



குரும்பசிட்டி

### அமரர் சண்முகராசா சற்குணானந்த ஸ்ரீஸ்கந்தராஜா

*(போட்டோ ஸ்ரீ)*

திதி நாள்: ஐப்பசி, தேய்பிறை திரயோதசி
மண்ணின் மாண்புறு மனையறம் பேணி
கண்ணின் இமைபோல் கருத்துடன் காத்தெமைப்
பண்பிலும் பாசத்திலும் பெருநதியாய் விளங்கி
விண்ணகம் ஏகிய வியன்கலை முதல்வா!
ஆண்டொன்று சென்றும் மாறாஉடம் பிரிவு
ஈண்டெமைத் துயராழியில் ஆழ்த்தி நிற்க
தூண்டிற் புழுவாய்த் துடிக்கிறோமையா!
மீண்டென்று நின்திரு முகங்காண்போமையா?
கண்ணுதற் பிரான் கழலடிப் பேறில்
நின்னான்மா இணைந்து சாந்தியுற
வேண்டி வழுத்தி வணங்குகிறோ மையா!

என்றும் நினைவகலா:
மனைவி - மீரா,
மகன்கள் - கிருஷோப்தமா, வக்ஷஸன்.

*குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.* பாவாக்கம்: அருணவதா (9558)

# தமிழ்த் தேசிய உணர்வை வலியுறுத்தி சுயநிர்ணய உரிமையுடன் தன்னாட்சி

## ஐரோப்பிய நாடுகள் தேசியத்தை வளர்த்துக்கொண்ட விதம்

தேசிய இனம் என்பது குருதியினம் அல்லது மரவினமாகும். இவை ஒன்றுக்கொன்று தொடர்பைக் கொண்டிருந்தபோதும், சமூகவரலாற்றியலில் அவை வெவ்வேறான உருப்படிகள் ஆகும்.

குருதியினம் என்பது தொல் பழங் காலத்திலிருந்து தாம் தோன்றி வளர்ந்த குறிப்பிட்ட நிலப்பகுதியுடன் அதில் உருவாகிப் படர்ந்த மொழி, தனிப் பண்பாட்டுடன் பிணைப்புண்டு நெடிய மரபுடன் கூடியதாகும்.

கிறிஸ்துவுக்கு முன்பே வாழ்ந்த மக்களிடையே தேசிய இனம், ஒரு குறிப்பிட்ட சமுதாய (தேசிய இன) மக்களிடையே மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, மரபுகள், நிலவெல்லைப் பகுதி போன்றவை உளப்பூர்வமாகப் பிணைப்பை ஏற்படுத்திவிடும் தன்மை கொண்டது.

அதனைத் "தேசியம்" அல்லது "நாட்டுப்பற்று" என்கிறோம்.

முதல் நிலைப் பண்புக்கூறுகள் ஒருமக்கட் சமுதாயத்தை மொழித் தேசிய இனம் என்று அடையாளப் படுத்தக்கூடியவகையில் உருவாக்கம தரும் அளவுடன் மட்டுமே நின்றுவிடுகின்றன. அச்சமுதாயம் தேசிய இன ஆக்கத்தைப் பெற்றுவிட்டது எனக் கூறமுடியாது. ஆனால், சார்நிலை ஆக்கக்கூறுகள்தான் அதனை மெய்யான தேசிய இனமாக வளர்க்கின்றன.

முதல்நிலைப் பண்புக்கூறுகளைப் பெற்றிராத மக்கட் சமுதாயங்களையும்கூட முழுத்தேசிய இயல்புடனே தேசிய இனமாக அமைத்துவிடுகிறது.

தேசிய இனத்தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாற்று கருத்தியல் கோட்பாடுகளை ஆராய்வது பொருந்தும்.

ரஷ்யாவையும், யூகோஸ்லாவியாவையும் தவிர மொழி அடிப்படையில் தனியின தகுதி பெறுவதற்கு ஒரே மொழி பேசும் மக்கள் சமுதாயங்களைக் கொண்ட தனி நாடுகள் அதிகமாக இல்லை.

இதனால் ஐரோப்பாவில் இடைநிலைக் காலத்தில் "தேசியம்", "தேசிய இனம்" பற்றிய தெளிவான கருத்தாக்கம் உருவாகவில்லை.

தனிமொழி இன இயக்கங்களாலும் விடுதலை வேண்டுகிற அமைப்புகளாலும் அம்மக்களிடையே மொழிப் பெருமை, இலக்கியங்கள், பண்டைய பண்பாட்டுநிலை, வரலாற்று வெற்றிகள போன்றவை பரப்பீடு செய்யப்பட்டும் எழுச்சி வடிவம் தரப்படும் "தேசியம்" (நாட்டுப் பற்றுறுதி) வளர்க்கப்பட்டது.

இனமும் மொழியும் கைகோத்துச செல்பவை. குறிப்பிட்டதொரு மக்கட் சமுதாய உறுப்பினர்களை இணைப்பது மொழி. அவர்களிடையே தோன்றும் எண்ணங்களும் உணர்வுகளும் ஏறத்தாழ ஒரே வகையைச் சார்ந்தவையாகின்றன. அதனால் ஒத்தமரபு வளர்கின்றது.

மொழி என்ற திறவுகோலால், அம்மக்களின் உளப்பூர்வமான தொடர்பு என்னும் பூட்டைத் திறந்து அம்மக்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் அறியலாம்.

எந்தவொரு நிலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட மொழி நிலைபெற்றுத் திகழ்கின்றதோ, அந்தப் பகுதியில் ஒரு தேசிய இனம் உண்டு. அதற்குத தன் காரியங்களைச் சுதந்திரமாகச் செயற்படுத்துவதற்கும் தன்னைத் தானே ஆண்டுகொள்வதற்கும் உரிமையுண்டு எனப் பேரறிஞர் ஃபிச்டே விளக்கியுள்ளார்.

தமிழ்த் தேசியத்தின் வரலாற்றுப் போக்குகள் விளைவிக்கும் எதிர்கால நிகழ்வுகள், கணிப்புகள், எதிர்பார்ப்புகள், செயற்பாடுகளை அடக்கிய நல்லதொரு சூழ்நிலை மட்டுமே ஏற்பட்டுள்ளது.

விடியலுக்கு முன் வெள்ளி தோன்றுவதைப் போலத் தமிழ்த் தேசிய இனம் நெடும் பயணம் செய்யவேண்டும்.

அதற்கு ஆட்சியியல், அரசமைப்பு, தமிழ்ச் சமுதாய நிலை, வந்த பாதையில் ஏற்பட்ட வழுக்கல், பட்டறிவு, வரலாற்றுப் போக்கு போன்ற பல் சிறப்புக் கூறுகளின் அடிப்படையில் தமிழினம் தனது தனித்தன்மையை மையமாகக்கொள்ளவேண்டும்.

வெறும் வறட்டுக் கோட்பாடுகளுக்குள் அடைத்துக்கொள்ளாமல், இயன்றவரை நடைமுறை வழி வகைகளைச் செவ்வனே ஆராய்ந்து கண்டறியவேண்டும். படிநிலைகளை அறிந்து உரிய செயல் நிலைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழினத்தின் வளர்ச்சி, எழுச்சி நிலையில் எதிர்காலக் குறிக்கோள்களையும், அதனை அடையும் செயல் முறைகளையும் வகுத்துக்கொள்வதற்கு முந்திய நிகழ்வுகள், அமைப்புக்கள், ஆக்கக்கூறுகள், செயல் முறைச் சிக்கல்கள், ஏற்பட்ட தவறுகள் போன்றவற்றை நடுவுநிலையில் நின்று ஆராய்ந்து தெளிய வேண்டியது மிக இன்றியமையாதது.

ஆனால், இன்றைய கொள்கை நிலை, நடைமுறை போன்ற அளவுகோல்களையே வைத்துச் செயற்பட வேண்டும். கால இடைவெளி, கருத்து

**பேராசிரியர் பொன்.சக்திவேல்**

வளர்ச்சி, சூழ்நிலைகள், இயல்பான தடைகள், இயலும் அளவுநிலை போன்ற தனிச் சிறப்புக் கூறுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டே குறை நிறைகளைக் காணவேண்டும்.

சுயநிர்ணய உரிமை என்பது தேசிய இனங்களின் பிறப்புரிமை எனலாம். தானே முடிவெடுக்கும் தன்னுரிமையின் உள்ளுயிரோட்டத்தின் ஊடாகும் தேசிய இனங்களின் தனித் தன்மைகள் அவற்றை நிலையாகப் போற்றிப் பேணுவதற்குரிய அதிகார மூலங்களைப் பெறுவதேயாகும்.

ஒரு குடியரசு நாட்டின் தேசிய இன மக்களிடம் என்றென்றும் நிலைத்து நிற்கும் அரசியல் இறையாண்மையே சுயநிர்ணய உரிமையின் உயிர்ப்பகுதியாகும்.

சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம், அதன் தேசிய வாழ்க்கையை அது விரும்பும் வகையில் அமைத்துக் கொள்வதாகும். அதனைத் தன்னாட்சியின் அடிப்படையில் அமைத்துக்கொள்வது என்று முன்னாள் சோவியத் அதிபர் ஸ்டாலின் கருதினார்.

எனவே, சுயநிர்ணய உரிமை என்பது முற்றும் தனிநாடாக இயங்குவதை மட்டுமே குறிப்பிடுவதில்லை. இறையாண்மையும் சுய உரிமைகளும் கூடிய தனிநாட்டினங்கள் அவற்றுக்கு ஊறு நேராமல் மெய்யான கூட்டாட்சியில் இணைவதையும் உள்ளடக்கமாகச் செயற்றிட்டமாகக் கொண்டது.

தனிநாட்டினங்கள் இணையும் போது அவற்றின் முழு இறையாண்மையிலிருந்து கூட்டாட்சி நாட்டுக்குத தேவையான சில அதிகாரங்களை மட்டுமே விட்டுக்கொடுப்பதாகும்.

மார்க்சியக் கோட்பாட்டின்படி சுயநிர்ணய உரிமையில் ஒரு கூறு 'பிரிந்து போகும் உரிமை' எனக் கருதப்பட்டது. ஏறத்தாழ எண்பது ஆண்டுகளாக மிகப்பெரும் முன்னோடி சமதர்ம கூட்டரசாகத் திகழ்ந்த சோவியத் அமைப்பு, பல துண்டுகளாகச் சிதைந்த பின்னர் 'பிரிந்துபோகும் உரிமை' எனபது கேள்விக்குரியதாகிவிட்டது.

இதேபோன்று நோர்வேயும் சுவீடனும் பிரிந்தன; இணைந்தன; மீண்டும் பிரிந்தன.

மலேசியாவும், சிங்கப்பூரும் இணைந்தன; பிரிந்தன. "வேற்றுமைகளில் ஒற்றுமை காணுதல்" என்பதே கூட்டாட்சிக் கொள்கையின் உயிர்நாடியாகும். தேசிய இனங்களில் நாளடைவில் அரசியல், பொருளியல் வரலாற்றுக் காரணங்களால் உந்தப்பட்டு அரசியல் விழிப்பெய்தினால் தங்களது தனி இனப்பண்புகளால் மொழிசார்ந்த அரசியல் உரிமையையும் பேணிக் கொள்ள முனையும். அப்போது அங்கு சுயநிர்ணய உரிமையுடன் மெய்யான கூட்டாட்சிக் கொள்கை உருவெடுக்கும்.

இவ்வகையில் பிறக்கும் கூட்டாட்சியில் ஏற்கனவே அரசு கொண்டிருந்த அதிகாரம் உட்பட பல்வேறு அதிகாரங்களைத் தேசிய இன தன்னரசுகளுக்கு வழங்கி, மத்திய அரசின்கீழ் பாதுகாப்புக் குடியகல்வு, குடிவரவு, சுங்கம் போன்றவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு மற்றைய அதிகாரங்கள் வழங்கப்படும்.

இறையாண்மை கொண்ட தேசிய இனங்களின் பிரதிநிதிகளால் அமைக்கப்படும் அரசமைப்புச் சபையின்மூலமாகப் புதியதோர் அரசமைப்பை இயற்றித்தான் அம்முழு தன்னாட்சிபெற்ற மொழி இனத்தாயகங்களான மாநிலத்தையும் மெய்யான கூட்டாட்சியையும அமைக்கமுடியும்.

சுயநிர்ணய உரிமையின் சரியான இயல்பைப் புரிந்துகொள்ளுதல் முதல அவசியமான முழு மாநில தன்னாட்சியைப்பெறும் அதிகாரப் பரவலாக்கல என்று குறிப்பிடமுடியாது.

அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு நிலையற்ற அரசியல் ஏற்பாடே தவிர நிரந்தரமானதோர் அரசமைப்பு உரிமையல்ல.

அரசிடம் இருக்கும் அதிகாரங்களை மாநில அமைப்புக்களுக்கு வழங்கும் முறையே அதிகாரப் பரவலாக்கம் ஆகும். இது மெய்யான கூட்டாட்சிக்கோ அல்லது தேசிய தன்னரசின் அமைப்புகளுக்கோ பொருந்தாது.

தன்னாட்சி பெறத்தக்க வகையில சரியாகவும் முறையாகவும் தொலைநோக்குடனும் சுயநிர்ணய உரிமை குறிக்கோளை ஏற்று எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது முக்கியவிடயமாகும். தமிழினம் தேசியத் தன்னுரிமையைப் பெறுவதும் முதல்நிலைப் பண்புக் கூறுகளான மொழி, இனம், பண்பாடு போன்றவற்றில் வெளிப்படும் உருவாக்கம் போன்றவற்றை பெறுவதும் முக்கியம்.

தமிழ்த் தேசிய இனத்தின் ஆக்கத்தைப் பெறத்தக்க சார்பு நிலைக்கூறுகளான இன ஒற்றுமை அனைத்துப் புலங்களிலும் ஏற்றத்தாழ்வை அகற்றல், சமுதாய மாற்றத்தை நோக்கிச் செலுத்துகின்ற சமுதாய சீர்திருத்தங்கள், ஜனநாயக உரிமையுடன் சாமானியத்தையும் மேம்படுத்தவேண்டும்.

மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது முதன்மையானதாகும். இவற்றின்மூலமே சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தன்னாட்சி உருவாக கூட்டாட்சி வழி வகுக்கும். ☆

---

## காலங்காலமாக நடந்துவரும்
# அரும்பொருள்கள் கடத்தலை இனியும் அனுமதிக்கக்கூடாது!
## சிரேஷ்ட ஆய்வாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.குடாநாட்டில் இருந்து அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள கடத்தப்படுவது என்பது இன்று நேற்றல்ல இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரேயே ஆரம்பித்துவிட்டது.

எனவே, இவ்வாறு அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் குடாநாட்டிலிருந்து கடத்தப்படுவதை இனிமேலும் அனுமதிக்கக்கூடாது. இது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளரும், ஆய்வாளருமான கலாநிதி ப.புஸ்பரட்ணம்.

குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கு அரும்பொருள்கள் கடத்திச் செல்லப்படுவது தொடர்பாகவும் - இதனைத் தடைசெய்யும் வகையில் முன்னெடுக்கப்படக்கூடிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இந்தக கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி புஸ்பரட்ணம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டிலிருந்து அரும் பொருள்கள் கடத்தப்படுவது என்பது ஏறக்குறைய 1935ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்துவிட்டது. குறிப்பாக அந்நியர் ஆட்சியின்போது குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அரும்பொருள்கள் தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் கொண்டுசெல்லப்பட்டன.

அன்று முதல் இன்றுவரை சர்வதேச ரீதியில் அரும்பொருள் வியாபாரம் என்பது இலாபகரமானதாகவே இருந்து வந்துள்ளது. இத்தகைய வியாபாரப்போக்கே இன்று அரும்பொருள்கள் கடத்தப்படுவதற்கும் கொழும்பு மற்றும் உலக நாடுகளில் உயர் விலைக்கு விற்பனை செய்யப்படவும் காரணமாகும்.

அரும்பொருள்கள் கடத்தப்படுவதைத் தடைசெய்யும் நோக்குடன் பல்வேறு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, நிர்வாகங்கள் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் அரும்பொருள்கள் கடத்தப்படுவதைத் தடைசெய்யமுடியவில்லை.

எனவே, இவ்வாறான நிலைமை இன்று வரையும் தொடர்வதற்குக் காரணம் அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய போதிய அறிவு எம்மவர் மத்தியில் இன்மையே.

எமது நாட்டில் அன்றுமுதல் இன்று வரையும் நடைமுறையில் இருந்து வரும் கல்விமுறையானது குறிக்கப்பட்ட இனமொன்றின் மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை நாட்டில் வாழும் சகல இனங்களுக்கும் எடுத்துக் கூறுவதாகவும் திணிப்பதாகவுமே இருந்து வந்துள்ளது.

குறிப்பாக, தமிழ்மக்களுடைய வரலாற்றுத் தகவல்கள், கலாசார விழுமியங்கள் குறித்த கல்வி மரபு நடைமுறையில் இருக்கவில்லை. இவ்வாறான நிலைமை மாற்றம்பெறும்போதே அரும்பொருள்கள விடயத்தில் ஆக்கபூர்வமான முயற்சிகளை நடைமுறைப்படுத்தமுடியும் - என்றார் அவர்.

மேற்படி கலந்துரையாடலில் கலாசாரச் சின்னங்களை, அரும்பொருள்களை இனங்காண்பது, தகவல் சேகரிப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதி, நாணயங்கள், பட்டயங்கள், மண்பானைகள், மரச்சிற்பங்கள், மரத்தளபாடங்கள், ஆலய பூசை உபகரணங்கள் மற்றும் பல்வேறு அரும்பொருள்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுவது குறித்து யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கு கலாநிதி ப.புஸ்பரட்ணம் விளக்கமளித்தார். (எ)

---

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 'வார்ட்'டுக்களை திறக்குக!
### நலச் சேவைகள் சங்கம் மகஜர் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கு வசதியாக வார்ட்டுக்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் மாகாண பிரதி சுகாதாரப பணிப்பாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் வேளையில் நோயாளர்கள் வார்ட்டுக்கள் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என அந்தச் சங்கம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் மாகாணப் பிரதி சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். இந்நிலையில் இப்பகுதியைச் சேர்ந்த அரச திணைக்களங்கள், பாடசாலைகள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும வர்த்தக மையங்கள் என்பன மீண்டும் தமது சேவையை மிகவும் உன்னதமான நிலையில் மக்களுக்கு வழங்கிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சுகாதார வசதிகளைப் பொறுத்தவரை சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதி நல்ல முறையில் இயங்கிவருகின்றது. ஆனால், இங்கு நோயாளர் வார்ட்டுக்கள் இதுவரையும் ஆரம்பிக்கப்படாமையினால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதைக் காணமுடிகிறது.

ஆகவே, தாங்கள் தயவுசெய்து இவ்விடயத்தில் தலையிட்டு மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் ஆகக் குறைந்தது மூன்று நோயாளர் வார்ட்டுக்களை (ஆண், பெண் மற்றும் பிரசவம்) திறப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி மத்திய மருந்தகம், வரணி மத்திய மருந்தகம், கொடிகாமம் மத்திய மருந்தகம் ஆகியவற்றை வாரத்தில் ஏழு தினங்கள் முழு நேரமும் இயங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலர், சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றம் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-5)

---

### கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில்
## ஆசிரிய பற்றாக்குறையை நீக்குமாறு கோரிக்கை!

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கி மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் ஆசிரியர் சங்கம வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இக்கோரிக்கைக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

போதிய ஆசிரியர்கள் இன்மையால ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகள், இடைநிலை வகுப்புகளில் சிறப்பான கல்விப் போதனை அமையவில்லை என கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டு இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன்-

மழைகாலங்களில் வகுப்புகளை நடத்த முடியாதவாறு வகுப்பறைக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளமையால் அவற்றைத் திருத்தித் தருமாறும் கோரிக்கைவிடப்பட்டுள்ளது. (ம-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நீர் இறைக்கும் இயந்திரம் Kubta, ஜெனரேற்றர் இயந்திரம் 8H.P. Yanmar 3KW டைனமோவுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இந்திரன்மில், உடுவில் றோட், மானிப்பாய்.(9652)

பகிறா No.1 புறொயிலர் குஞ்சுகள் இன்று (19-10-2002) சனிக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவு செய்தவர்கள் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: இராசநாயகம், இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (9588)

ஒருவரின் பாவனையிலுள்ள FORD ESCORT கார், LML Vespa (T5 Self stat) ஸ்கூட்டர் என்பன விற்பனைக்கு உண்டு (தனிப்பெற்றோலில் ஓடிக்கொண்டிருப்பவை). தொடர்பு: 36, வைமன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (9440)

அல்ஷேசன் பெண் நாய்கள் இரண்டும் நாய் வளர்ப்பதற்குகந்த கூடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.சுரேசன், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை (மூத்த விநாயகர் கோயிலடி). (9627)

நல்ல நிலையிலுள்ள 1215 கனன் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.36, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி. T.P. 2223078. (9588)

கடைப்பாவனைக்குரிய 5 அடி நீளமும் 3 அடி உயரமும் உடைய தேக்கினால் செய்யப்பட்ட கண்ணாடி ஷோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.விஜயன், 35/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (9637)

நல்ல இன Dachund நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9658)

தரமான புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 220/- மட்டும். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரிக்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (9632)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 130/- சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:3529, 2867. (9636)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(9511)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. 1Kg 130/- சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 85, செம்மணி வீதி, நல்லூர். (9585)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மிகவும் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. மொத்த கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (9654)

## வீடு விற்பனைக்குண்டு

திருநெல்வேலி, பலாலி வீதியில் தபால் பெட்டியடியில் 4 அறைகளுடன் நாற்சார் வீடு விற்பனைக்கு உண்டு. 106, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கில் (விற்பனைக்குள்ள வீட்டின் அருகில்) உள்ள உரிமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (9648)

## வீடும் காணியும் விற்பனைக்கு

31/2 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும், 21/2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 193, கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். T.P No.021-222 2300. (9635)

## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு

இரண்டு கதவுகளைக் கொண்ட புதிய குளிர்சாதனப் பெட்டியும் மிகவும் நல்ல நிலையிலுள்ள 142 தொடர் இலக்கத்தைக் கொண்ட 12N Bajaj Scooter உம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "நில்சுந்தா", யாழ்.வீதி, மானிப்பாய். (நாயகபாலன் ஸ்ரோர்ஸ்க்கு முன்பாக) (9646)

## கோழித்தீன் விற்பனைக்கு

Original Prima கோழித்தீன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக எடுப்போருக்கு விசேடகழிவுண்டு. 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9512)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima, Broiler குஞ்சுகள் Prima பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9657)

## ஜோதிடம்

நாள்பட்டநோய் மாற்றுதல்கவலை வேண்டாம். ஜாதகம், கைரேகைமூலம் பலன் அடையலாம். தொடர்பு சி.சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (9552)

## தருப்பு மருந்துகள்

CRD சளி மருந்து புதன்கிழமை காலையும் Gampura Ratiket மருந்துகள் ஞாயிற்றுக்கிழமை காலையும் வழங்கப்படும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(9515)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தியாகராசா தியாகேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ.(இல.652930506V), அப்புத்துரை கோபிநாத் என்பவருடைய வி.அ.அ. (இல.0903004991) மற்றும் ஆவணங்களும் எம்மிடம் உள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: தயாளன் கூல்பார், இல.2, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (9642)

## வளர்ப்பு மீன்கள்

கலர் மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump தாவரங்கள் விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9519)

## வகுப்புகள்

Maths, English O/L பரீட்சையில் A, B, C பெறுபேறடையவும், தரம் 8, 9, 10 உட்பட Paper Class ஆங்கிலம் A/L, G.A.Q. வகுப்புகளுக்கும் கற்பிக்கப்படும். 85, சிவன்கோயிலடி, கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (9488)

தரம் 03முதல் ஆங்கில வகுப்புக்கள், அத்துடன் நடனம், சங்கீதம் ஆகிய வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன. ஆங்கில வகுப்பு நடைபெறும் இடங்கள்: 389, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம; 36, வைமன்வீதி யாழ்ப்பாணம். தொடர்பு: 05 S.K.Rajan B.Com. (M.M.Spl.) 36, Wyman Road, Jaffna. (9623)

## ஆங்கிலக் கல்வி

ஆங்கில ஆசிரியரினால் க.பொ.த (சா/த) 2002 டிசெம்பர் பரீட்சைக்கான ஆங்கில மீட்டல் வகுப்புக்கள் (Paper Classes) நடைபெறுகின்றன. (புது இலக்கம்) 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (9506)

## மணமகன் தேவை

31வயது, படித்த, அழகிய, சைவ போசன மணமகளுக்கு வெளி நாட்டில் தொழில் பார்க்கும் மணமகன் தேவை. விளம்பர இல.1670,மே/பா உதயன். (9349)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970 ஆம் ஆண்டு, ரேவதி நட்சத்திரம், 2இல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு கனடா, சுவிஸ், லண்டன் பிரஜாவுரிமை உடைய மணமகன் தேவை. தொடர்பு: எ.குணவதி, 105/1, கண்டிவீதி, யாழ்ப்பாணம் (பெந்தகோஸ்க்கு அருகில்). (9560)

## மணமகள் தேவை

படித்த, சொந்த வியாபாரம் செய்யும், இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 33 வயதுக்குட்பட்ட, உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. விளம்பர இல.1669, மே/பா உதயன். (9348)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1961-11-24ஆம் திகதி மிருகசீரிடம் 8இல் செவ்வாய், சுயமாகத் தொழில் செய்யும் மணமகனுக்கு தகுதியான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சுகனகசபை பூதராயர் கோயில் ஒழுங்கை. பருத்தித்துறை. (9598)

## திருமண சேவை

1975 பூரம், செவ்வாய்8, U.K மணமகனுக்கு 1980இற்குப் பின் பிறந்த, பாவம் குறைந்த, அழகான, படித்த மணமகள் தேவை Sponser உண்டு. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம் (9592)

## வேலையாள் தேவை


சமையலிற்கு ஒரு பெண்ணும் வேறு வேலைகளிற்கு ஓர் ஆணும் தேவை. தங்கியிருக்கவேண்டும். சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். உடன் நேரில் வரவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (9518)

உ
ஓம் சக்தி!
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமா!

## திருமண நல்வாழ்த்துக்கள்

எமது அன்புக்குரியவர்களான செல்வங்கள்

திரு.திருமதி மயில்வாகனம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் மணமகன் திருநிறைசெல்வன்
**சிவானந்தன் (சிவா)**





திரு.திருமதி தங்கராசா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி மணமகள் திருநிறைசெல்வி
**அனுசியா (அனு)**

ஆகிய இருவருக்கும் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணைந்து, புதுமணத் தம்பதிகளாக நல்லைச் சுந்தன் கருணையோடு வாழ
இன்று (19.10.2002) சனிக்கிழமை ஜேர்மனியில் திருமணம் நடைபெறுகின்றது. இவர்கள் இருவரும்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"
என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்குக்கிணங்க வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை அருளால் திருமண வாழ்வில் சிறந்து விளங்கி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்க மணமக்கள்!

வாழ்த்துவோர்:
திரு.திருமதி சதீஸ்குமார்:வாசுகி (அத்தான்-அக்கா),
பிள்ளைகள்: தேனிகா, தக்சிகன்,
குடும்பத்தினர்.

காங்கேசன்துறை வீதி,
மதவடி ஒழுங்கை,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(9641)

## உளம் மகிழ்கின்றது

சங்கானை ஜுப்பிற்றர் விளையாட்டுக் கழக
நிர்வாக சபை உறுப்பினர்களாகிய
**செல்வி சத்தியவதனி கந்தசாமி**
**செல்வி நிலானி பாலசிங்கம்**
ஆகிய இருவரும் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக 22ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் B.A.(Hons) பட்டம் பெற்றமையினையிட்டு கழகம் உளம் மகிழ்வதோடு, வாழ்வில் சிறப்படைய தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. (9645) **ஜுப்பிற்றர் வி.க.சமூகம்**

உ
ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

## மனமுவந்த பாராட்டுக்கள்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானத்தில் 16.10.2002இல் நடைபெற்ற விழாவில்
"லக்ஷ்ண சாகரம்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற
யாழ்.வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான அர்ச்சகர்
**பிரம்மஸ்ரீ வை.சபேஸ்வர சர்மா** அவர்களுக்கு
எமது மனமுவந்த பாராட்டுக்கள்.

- சைவப்புலவர் சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன் (வில்லிசை),
- லக்ஷ்மி நாராயணன்.

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (9639)

உ
ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் 16.10.2002 புதன்கிழமை நடைபெற்ற எம் பெருமானின் திருக்கல்யாண வைபவத்தில் - பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர்களான,**
பிரம்மஸ்ரீ ம.சிவசரவணபவ சர்மா அவர்கள்
பிரம்மஸ்ரீ வை.சபேஸ்வர சர்மா அவர்கள்
திரு.வெ.நா.செ.நாராயணசாமி அவர்கள்
ஆகியோரை ஸ்ரீ கிருஷ்ணர் அருளால் நீடுழி வாழ வேண்டுமென
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.சு.நித்தியானந்தன்
தலைவர்
வடபிராந்திய இந்துப் பேரவை,
யாழ்ப்பாணம்.
(9640)

## 31ஆம் நாள் நினைவலைகள்



| உதயம் | அஸ்தமனம் |
| --- | --- |
| 31 | 18 |
| - | - |
| 12 | 09 |
| - | - |
| 1912 | 2002 |

**அமரர் கந்தையா பாலசிங்கம்**

நல்லூரான் நிழலில் இளைப்பாறும் - எம்
பாசப் பிழம்பே!
உங்கள் நினைவலைகள்
எங்கள் இதயக்கடலில் - என்றும்
ஓயாமல் இசை பரப்பிக் கொண்டே இருக்கும்!

621, பருத்தித்துறை வீதி, நல்லூர். - குடும்பத்தினர்.
(9647)

## ஐந்தாம் ஆண்டின் நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 23 | 14 |
| - | - |
| 03 | 10 |
| - | - |
| 1923 | 1997 |

**திருமதி நாகலிங்கம் கண்மணி**

*அன்பு ததும்பும் முகம் கண்டு ஆண்டுகள் ஐந்தானதம்மா!*
*என்பு தோல் தந்தெம்மை உலகினுக் கீந்தவளே!*
*வறுமைகள் வந்தபோதும் எமை வாடாமல் காத்தவளே!*
*வசதிகள் வந்தபோது எமை வாடவிட்டுச் சென்றதேனம்மா?*
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நா.தெட்சணாமூர்த்தி,*
*39, மாவடி லேன்,*
*யாழ்ப்பாணம்.*
(9638)
- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# கண்ணீர்ப் புகையோ, றப்பர் குண்டோ பாவிக்கவில்லை படையினர் வேண்டுமென்றே மக்களைக் கொன்றுள்ளனர்

## காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி கண்காணிப்புக் குழுவின் அரசுப் பிரதிநிதி ஆவேசம்

காரைதீவு,ஒக.19

"காஞ்சிரங்குடா சம்பவத்தின்போது அதிரடிப்படையினர் கண்ணீர்ப்புகையையோ, றப்பர் குண்டையோ பாவித்ததற்கான சான்றுகள் கிஞ்சித்தும் இல்லை. இவற்றை பார்க்கும்போது அதிரடிப் படையினர் வேண்டுமென்றே அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துள்ளனர் என்பது கண்கூடு."

- இவ்வாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட அரச தரப்புப் பிரதிநிதி மெல்வின் விஜேசேகர ஆவேசத்துடன் கூறினார்.

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வாராந்த விசேட அமர்வு கடந்த வியாழக்கிழமை அன்று அம்பாறை தலைமையகத்தில் தலைவர் கார்ல் தலைமையில் நடைபெற்றது.

சர்வதேசப் பிரதிநிதிகளான அன்சாயி, எட்கர் ஆகியோருடன் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளான சட்டத்தரணி ஆ.செளந்தரராஜா, இரா.சண்முகநாதன், அரச தரப்புப் பிரதிநிதிகளான மெல்வின் விஜேசேகர, ஏ.ஆர்.ஏ.அஸீஸ் ஆகியோர் அங்கு சமுகமளித்திருந்தனர்.

காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பாக கடந்த வாரம் பதில் தலைவர் திருமதி ஆன் லுயிஸ் விடுத்த அறிக்கை கூட்டத்தில் சூடான வாதத்தைக் கிளப்பியிருந்தது. அதன்போது அரசுத் தரப்பு பிரதிநிதியான ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரி மெல்வின் விஜேசேகர கனல் பறக்கும் கருத்துக்களை உச்சஸ்தாயில் பேசினார்.

மெல்வின் விஜேசேகர அங்கு மேலும் கூறியதாவது:-

"காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி திருமதி ஆன் லுயிஸ் வெளியிட்ட அறிக்கை தவறானது. சம்பவம் இடம்பெற்ற அன்று பொதுமக்கள் முகாமிற்குள் அத்துமீறிப் பிரவேசித்தனர் என்றும் அதனால் பொறுமையிழந்த படையினர் முதலில் கண்ணீர்ப் புகையையும் றப்பர் குண்டையும் பயன்படுத்திய பின்னரே நிஜக் குண்டைப் பயன்படுத்தியதாகவும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இது தவறானது. ஆன் லுயிஸ் முதலில் அங்கு செல்லும் போது எங்களில் ஒருவரையாவது அழைத்துச் சென்றிருக்க வேண்டும். சரி; தனியே சென்றிருந்தாலும் சம்பவ இடத்துக்கு போய் வந்தபின் கூட்டத்தைக் கூட்டி எம்முடன் கலந்துரையாடியிருக்கவேண்டும்.

"அப்படியொன்றுமே இல்லாமல் தனியே சென்று சம்பவம் தொடர்பாக படையினரின் கதையை மட்டும் கேட்டுவிட்டு வந்து படையினர்களுக்கு சார்பாக கண்காணிப்புக் குழு அறிக்கை விடுவதென்பது எமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடியது. ஒட்டுமொத்தமாக கண்காணிப்புக் குழுவுக்கே இது அவமானம். காஞ்சிரங்குடா சம்பவத்தில் படையினர் கண்ணீர்ப் புகை பாவித்திருந்தால் மக்கள் சிதறுண்டு ஓடியிருப்பார்கள்; அங்கு நிற்கமுடியாதிருந்திருக்கும். றப்பர் குண்டையும் கூட அவர்கள் பாவிக்கவில்லை. படையினர் கூறுவது பொய். அவர்கள் வேண்டுமென்றே - திட்டமிட்டு - அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக் கொன்று குவித்துள்ளனர். எனவே ஒரு பக்கசார்பான அறிக்கையை வாபஸ் பெறுங்கள்" என்றார் மெல்வின் விஜேசேகர.

கண்காணிப்புக் குழுத் தலைவர் கார்ல் பதிலளிக்கையில்-

"உங்களது ஆவேசம் நியாயமானது. தற்போது அரசினால் விசாரணை கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. அதன் விசாரணை அறிக்கை வெளிவரட்டும். அதன் பின்பு நாம் ஒரு முடிவுக்கு வருவோம்" - என்றார்.

மீண்டும் குறுக்கிட்ட மெல்வின் -

"அவர்களது அறிக்கை வரும்போது வரட்டும் எனது முடிவான முடிவு இது. அதிரடிப்படையினர் வேண்டுமென்றே செய்த படுகொலை இது. அறிக்கையை வாபஸ் பெறுங்கள்" - என்றார்.

பதிலளித்த தலைவர் கார்ல் கூறுகையில், "சரி இங்கு நடந்ததை கண்காணிப்புக் குழுத் தலைமையக தலைவருக்கு அறிவிக்கிறேன். அறிக்கையை மீள் பரிசீலனை செய்வோம்" - என்றார்.

கண்காணிப்புக் குழுவின் புலிகள் பிரதிநிதி சட்டத்தரணி ஆ.செளந்தரராஜா அங்கு பேசுகையில் -

"காஞ்சிரங்குடா படையினர் இப்படியான தாக்குதல்களைச் செய்திருப்பது இது முதற்றடவை அல்ல. ஏற்கனவே இம்முகாமுக்கு முன்னால் பேரின்பராஜா, கோபன் ஆகிய புலிகள் வழிமறித்துத் தாக்கப்பட்டு மரத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளனர். சாகாமம் சென்ற மூன்று மேசன்மாரை தடுத்து நையப்புடைத்து அனுப்பியுள்ளனர். இப்படி அந்தப் படையினரின் அராஜகம் தொடர்ந்து வருகிறது.

"சம்பவம் நடைபெற்று மறுநாள் பகல் 11.30 மணிக்கு அங்கு நாம் சென்றபோது ரயர் ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அது பற்றிப் படையினரிடம் கேட்டபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைத்தையும் உடைத்துவிட்டு எரித்துவிட்டுச் சென்றுள்ளதாகக் கூறினர். முதல் நாள் இரவு 6.30 மணியளவில் எரியத் தொடங்கிய ரயர் 16 மணித்தியாலங்கள் தொடர்ந்து எரியுமா? எல்லாம் திட்டமிட்டு சோடித்த தடயங்கள் அவை.

"சரி இச்சம்பவத்துக்கு அடிப்படைக் காரணத்தை எவரும் பேசவில்லை. புலிப் போராளி விஸ்வநாதனை படையினர் தாக்கியதே காரணம். புலிகள் என்று தெரிந்தே அடிப்பதாக படையினர் விஸ்வநாதனிடம் அடிக்கும்போது கூறியிருக்கிறார்கள். எனவே இதனையிட்டு கவனம் செலுத்தவேண்டும்" - என்றார். (எ)



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வடக்கு வீதிக்கு அருகில் அடியார்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட 'கண்ணன் இல்லத்' திறப்பு விழாவில் சமய முறைப்படி சுவாமிப் படப் பூசையை கோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.த.சுதர்சனக்குருக்கள் நடத்துவதை முதலாவது படத்திலும் - பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் நாடாவை வெட்டி கண்ணன் இல்லத்தை திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (எ-173)

### வடமராட்சி கிழக்கில்

## சட்டவிரோதமாக சவுக்குமரம் தறிப்பு

வடமராட்சி,ஒக்.19

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனைப் பகுதியில் சட்டவிரோதமாக சவுக்கு மரத்தை வெட்டிய கோஷ்டியினர், அதனைத் தடுக்கச் சென்றவர்களைக் கண்டதும் ஓடித் தப்பிவிட்டனர். இதனையடுத்து அவர்களால் வெட்டப்பட்ட ஒரு தொகுதி சவுக்கு மரங்களும் மீட்கப்பட்டன.

கடந்த திங்களன்று இச்சம்பவம் மேற்படி பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் சவுக்கு, கண்டல், பொற்பத்தை போன்ற பச்சை மரங்கள் களவாக இரவோடிரவாக விறகுக்காக வெட்டப்பட்டு வருவதையடுத்து கடற்புலிகளும், வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்க அங்கத்தவர்களும் இணைந்து இரவுவேளை குறித்த மரங்கள் உள்ள இடங்களை முற்றுகையிட்டபோதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன்போது மீட்கப்பட்ட சவுக்கு மரங்கள் வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-173)

## வன்னியில் நிர்வாகப் பணிகளுக்கு பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக.19

வன்னியில் நிர்வாகத்துறையில் நிர்வாக நிறைவேற்றுப் பணிகளில் பணியாற்ற விருப்பமுடைய 'டிப்ளோமா' சான்றிதழ் பெற்றோர் அல்லது பட்டதாரிகள் தமது சுயவிவரக் கோவையுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் 2ஆம் மாடியில் செயற்படும் தமது அலுவலகத்துக்கு நேரில் சமுகமளிக்கும்படி யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கள் கோரியுள்ளது.

வணிகமாணி, தொழில்நிர்வாகமாணி, வர்த்தகமும் கணக்கியலும் நிதிமாணி, உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் பொருளியல் சிறப்புப் பட்டம் போன்ற கல்வித் தகுதியுடையவர்கள் வன்னிப் பகுதியில் நிர்வாகப் பணிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பட்டதாரிகள் தொழில் அமைச்சின் தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பப்படிவத்தை பட்டதாரிகள் சங்கத்தில் பெற்றுப் பூரணப்படுத்திக் கொடுக்கும் கடைசித் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### 'உண்மை' நூல் வெளியீடு

வடமராட்சி,ஒக்.19

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அனுசரணையுடன் தேசியகலை இலக்கியப் பேரவையினால் கவிஞர் இ.முருகையன் எழுதிய "உண்மை" எனும் நாடக நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்துவார். பிரதம விருந்தினர்களாக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்ஆ.ராஜேந்திரன், கரவெட்டி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் க.அம்பலவாணர் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ம-173)

### பொதுமக்கள் நலன்கருதி

## பாஷையூர் கடற்கரை வீதியில் படை நிலைகளை அகற்றுக!

### கண்காணிப்புக் குழுவிடம் மகஜர்

குருநகர்,ஒக்.19

பாஷையூர் கடற்கரை வீதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்களில் மக்களை மீளவும் குடியேற அனுமதிக்காமல் தொடர்ந்து இராணுவம் அவ்வீடுகளை ஆக்கிரமித்துள்ளதனால் மக்கள் இடமின்றி சிரமப்படுகிறார்கள். ஆகவே, இராணுவத்தை இவ்வடுகளில் இருந்து வெளியேற்றி மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு பாஷையூர் சமூக நலன்புரி அமைப்பு யாழ்.போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக இந்த அமைப்பு வழங்கியுள்ள கோரிக்கை மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாஷையூரில் இதுவரை சுமார் 350 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இவற்றில் 70குடும்பங்கள் இடம்பெயர்ந்து வன்னி சென்று திரும்பி வந்துள்ளன.

இராணுவத்தினர் பாஷையூரில் சுமார் 200 வீடுகள் உள்ளடங்கிய பகுதியில் தங்கியுள்ளனர். இப்பகுதியில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

மேலும் பாஷையூர் கடற்கரை வீதியில் கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் இருந்து கரையோரமாக பழைய பூங்கா வீதிச் சந்திவரை இராணுவம் நிலைகொண்டுள்ளது.

இராணுவம் கடற்கரை வீதியில் உள்ள வீடுகளில் நிலை கொண்டிருப்பதனால் இவ்வீதியில் முன்னர் இயங்கி வந்த யாழ். மாநகர சபையின் பிரசவ விடுதி, பாஷையூர் உபதபாலகம், யாழ்.ப.நோ.கூ.சங்கக் கிளை, சனசமூக நிலையம் ஆகியவைகள் இயங்க முடியாத நிலையிலுள்ளன.

மேலும், யாழ்.திருக்குடும்பக் கன்னியர்களால் நடத்தப்பட்டு வரும் திருச்சிலுவை வைத்தியசாலைக்கு கடற்கரை வீதியூடாக செல்ல முடியாதநிலை உள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புத்துறை வரை பாஷையூர் கடற்கரை வீதியூடாக முன்னர் நடைபெற்று வந்த யாழ் - கொழும்புத்துறை பொதுப் போக்குவரத்து சேவைகளும் முடங்கியுள்ளன.

எனவே, பாஷையூர் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு தடையாக அமைந்துள்ள இராணுவத்தினரை பாஷையூர் கடற்கரை வீதியிலிருந்து அகற்றி மக்களது துயரங்களை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கக் கோருகின்றோம். - என்றுள்ளது.

(ஒ-51)

### சான்றிதழ் பெறாதவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.19

பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை பட்டச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களை இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வந்து தம்மைச் சந்திக்குமாறு தேசிய கல்வி நிறுவகத்தின், யாழ்.இந்து மகளிர் கல்லூரி நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் கு.சண்முகநாதன் கேட்டுள்ளார். (ஜ-ரி)

### அறநெறிப் பாடசாலைகள்

## சைவ பாரம்பரியத்தை வளர்ப்பதில் முன்னின்று செயற்படுதல்வேண்டும்

### பரிசு வழங்கும் நிகழ்வில் உரை

எமது நாட்டில் இன்று அருகிப் போயிருக்கும் சைவசமய பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் மீளக் கட்டியெழுப்ப அறநெறிப்பாடசாலைகள் உதவவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் சொல்லின்செல்வர் ஆறு.திருமுருகன்.

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை நடத்திய சைவ சமய அறிவுப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு யாழ்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தி.வேல்நம்பி தலைமையில் அண்மையில் காமாட்சி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ் வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆறு.திருமுருகன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பண்பாடுகள், பாரம்பரியங்கள், கட்டுப்பாடுகள் அனைத்தும் மிகவும் சீரழிந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது.

தொடர்ந்தும் இதேநிலை தொடருமானால், எமது கலாசாரமே அழிந்துவிடும் நிலை உருவாகலாம். எனவே, இவற்றைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது எம்மவரின் தலையாய கடமையாகும்.

எனவே, அறநெறிப்பாடசாலைகள் இதுவிடயத்தில் கூடிய அக்கறை எடுத்து எமது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கவேண்டும் - என்றார்.

வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் செ.குகதாசன், அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இரா.குணநாதன், புத்தூர் ஸ்ரீ.சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியர் எஸ்.லலீசன் உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர். (எ-110)

சங்குவேலி விவசாயிகளினால் நடத்தப்படும்

மாபெரும்.

**மாட்டுவண்டி சவாரிப் போட்டி**

இடம்: கந்தரோடை சவாரி மைதானம்

காலம்: நாளை (20-10-2002) ஞாயிற்றுக்கிழமை

பிற்பகல் 1 மணி

பிரவேசம், கட்டுப்பணம் உட்பட

அனைத்தும் இலவசம்.

சங்குவேலி விவசாயிகள்,
சங்குவேலி.

(9671)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

13.10.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில்
பட்டம் பெற்ற எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களான:



**செல்வன் சரவணை சுவேந்திரன்**
(உடற்கல்வி டிப்ளோமா)



**செல்வி பிரமிலா யோகலிங்கம்**
B.A. (Hons)

**ஆசிரியர் திரு.இரத்தினம் தமிழ்மாறன் B.A.**
(யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு)
ஆகியோரையும்

2002இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டுபுலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி பெற்ற எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களான:



**செல்வன் சுப்பிரமணியம் சுஜீவன்**
(156 புள்ளிகள், மாவட்ட மட்டம் 22)
யா/கரவெட்டி விக்னேஸ்வரா
கல்லூரி



**செல்வி விஜயரத்தினம் பிரியங்கா**
(126 புள்ளிகள்)
யா/கரணவாய்
மணியகாரன் தோட்டம்
அ.த.க.வித்தியாலயம்

ஆகியோரையும்
எமது கிராமத்தின் சார்பில்
மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அங்கத்தவர்கள், நிர்வாகிகள்
வள்ளுவர் சனசமூகநிலையம்,
இளைஞர் விளையாட்டுக் கழகம்,
முத்துமாரி அம்பாள் பரிபாலன சபை,
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்,
மாதர் அபிவிருத்திச் சங்கம்.

அண்ணா சிலையடி,
கரணவாய்.
(C/24320)

## காரைநகரில் பனை தறிக்கும் கடற்படையினர்

காரைநகர்,ஒக்.19

காரைநகர், தோப்புக்காடு மடத்து வெளவுப் பகுதிகளில் கடற்படையினரால் மீண்டும் பனை மரங்கள் பெருமளவு தறிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு பனை மரங்கள் தறிக்கப்பட்டபோது இப்பகுதி பொதுமக்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோர் பனை மரங்கள் தறிக்கும் இடத்திற்கு நேரடியாகச் சென்று தடுத்ததையடுத்து பனை மரங்கள் தறிப்பதை கடற்படையினர் நிறுத்தியிருந்தனர் என்றும் -

மீண்டும் தற்போது பனை மரங்கள் தறிக்கப்படுவதாகவும் - மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (73)

## மாதாந்த உதவிப்பணம்

நவாலி,ஒக்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கென உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்பவரினதும் ஐப்பசி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-100)


**வேலை வாய்ப்பு**

விளம்பரத்துறையில் பயிற்சியளித்து கொழும்பிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு:
**ஜோ.எகட்டன்,**
19/2, கண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன்ஒழுங்கை
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(9666)

மனைக்கு வெளியே ஒருமனை!

**ஜெசித்தாரா**

விலை குறைப்பு
☛ Four in One சிக்கன் புரியாணி அச்சாறுடன்
குறைக்கப்பட்ட விலையில்
110 ரூபா மட்டுமே.
வழமையான உணவுப் பொதிகள்
நண்பகல் 12மணி முதல் 3மணிவரை.
☛ முன்பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
உங்கள் உணவகம்
**ஜெசித்தாரா**
19/2, கண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன்ஒழுங்கை,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(9664)

**விஷ்ணு கல்வி நிலையம்**
**தாவடி**
A/L 2004
புதிய உதயம்
C.Maths: திரு.ச.மணிவண்ணன்
CHE.: திரு.வே.அன்பழகன் (அன்பு)
General Chemistry
மீட்டலுடன்
Inorganic Chemistry
ஆரம்பம்: 21.10 திங்கள் 3p.m
(9672)

**மீண்டும் மக்கள் மனங்கவர் மாப்பியன் அரிசி**

புகழ்பெற்ற மாப்பியன் அரிசி
சமாதான காலத்தில் மீண்டும்
யாழ்ப்பாணத்தில்.
கல்நீக்கப்பட்ட சுத்தமான அரிசி
மலிவுவிலையில் 10Kg பொதிகளில்.

விநியோகஸ்தர்கள்:
**P.T.R. TRADES**
021-222-2916

213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(9668)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

13.10.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற
செல்வி கலாஜோதி இராசரத்தினம் B.A.(Hons)
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்) அவர்களையும்
செல்வி மதிவதனா பரஞ்சோதி B.A.(Hons)
(தாவடி வடக்கு, தாவடி) அவர்களையும்
மேலும் பல பட்டங்கள் பெற்று கல்வியிலும் வாழ்விலும் உயர்வடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அராலி மந்திகை, வட்டுக்கோட்டை
திரு.திருமதி இ.சரவணபவன்.
(9653)


**BASF**

**விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி**
**Sales Promotion Officer**
அக்ரோ பிரிவு

23.10.2002 அன்று யாழ்ப்பாணத்திலும்
25.10.2002 அன்று வவுனியாவிலும்
நடைபெறவிருந்த மேற்கண்ட
பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள்
மறு அறிவித்தல்வரை
பின்போடப்பட்டுள்ளன.
(C/24328)

**The General Manager - Agro**
**BASF Finlay (Pvt) Ltd.**
*186, Vauxhall Street,*
*Colombo-02*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை
மாணவி
**செல்வி சாருண்யா செல்வராஜா**
அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002 இல் 132 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரை மனம் மகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவர் மேலும் கல்வியில் பல சிறப்புக்களை பெற வேண்டுமென எல்லாம் வல்ல அல்வாய் அரசடி விநாயகனை வேண்டி நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாமா, மாமி,
மச்சான்மார்.

மிதிலா அழகுமாடம்,
ஆவரங்கால்.
(9656)

## பாராட்டு வாழ்த்துக்கள்



- இறையன்பில் மலர்ந்த மலர் -

### புதியகுரவர் ஏ.சில்வெஸ்ரர்

மனிதருள் மாணிக்கமாகத் திகழ்கின்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சார்ந்த திரு.திருமதி அன்ரனி றீற்றா தம்பதியினரின் தவப்புதல்வன் ஆ.சில்வெஸ்ரர் அ.ம.தி. 17.10.1969இல் பிறந்தார். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கற்ற இவர் 1989அம் ஆண்டு வளனார் சிறிய குரு மடத்தில் இணைந்து குருத்துவப் பயிற்சியை ஆரம்பித்தார். 1992 முதல் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை நிறைவுசெய்து 1995இல் பண்டாரவளையில் நவசன்யாசப் பயிற்சியை முடித்தார்.

1996இல் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் முதலாண்டு இறையியல் கல்வியை ஆரம்பித்து 1997 - 2000அம் வருட காலப்பகுதியில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிறைவுசெய்தார். உரோமாபுரி கிறேகோரியன் பல்கலைக்கழகத்தில் ஆன்மீக இறையியலில் மேற்படிப்பை மேற்கொண்டு பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் 2001அம் வருடம் உரோமாபுரியில் தியாக்கோன் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இன்று 19.10.2002இல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயரால் குருவாகத் திருநிலைப்படுத்தப்படும் இவர் நாளை 20ஆம் திகதி மடுத் திருப்பதியில் தம் முதற் திருப்பலியை நிறைவேற்றுவார். இவரது அருள்பணி சிறக்க புனித அந்தோனியாரின் அருளும் ஆசியும் நமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

திரு.திருமதி A.P.இராசரத்தினம் புஷ்பராணி
மகன்: லிந்துஜன்.

புனித அந்தோனியார் வீதி,
கிழக்குத் தெரு, ஊர்காவற்றுறை.
(9665)

## மரண அறிவித்தல்

### நடராஜா கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், யா/ப.நோ.கூ.ச.)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கந்தசாமி 16.10.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் ராசமணியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (வவுனியா), ராஜேஸ்வரி (ஜேர்மனி), குணேஸ்வரி (மல்லாவி), ராதாகிருஷ்ணன் (ஆசிரியர், யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்), பாலச்சந்திரன் (ஹொலண்ட்), தர்மயோகேஸ்வரி (சுவிஸ்), கைலைநாதன் (ஜேர்மனி), சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி), சிவபாதசுந்தரம் (தபால் அதிபர், மாங்குளம்), சிவசக்தி (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை), ஜெயந்தி (ஹொலண்ட்), சுரேஸ்குமார் (சுவிஸ்), பகவத்கீதை (ஜேர்மனி), கிருபாசனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தங்கரத்தினம் மற்றும் அன்னலட்சுமி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2002) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராதாகிருஷ்ணன்
(மகன்).

77, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(9651)

## SALES SALES SALES.....

தீபாவளியை முன்னிட்டு லைடனில்
மகத்தான மலிவு விற்பனை

15.10.2002 செவ்வாய் முதல் — 04.11.2002 திங்கள்வரை

லைடனில் சகல பொருள்களையும் விசேடவிலைக் கழிவுடன் வழங்கு கின்றோம் என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக் கின்றோம்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.:2222381

*விஜயம் செய்யுங்கள் தீபாவளி விலைக்கழிவை அனுபவித்துமகிழுங்கள்.* (C-24267)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த திரு.திருமதி திருவாஞ்சீஸ்வரன் - பாலரோகினி தம்பதியரின் செல்வமகள்

### திருமதி ஜெயகப் திலகவதி

அவர்கள் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைப்பிரிவில்

"சிறப்புக் கலைமாணி" பட்டம் பெற்றமையையிட்டு நாம் பெரும் மகிழ்வடைகின்றோம். அத்துடன் அவர் மேலும் பல சிறப்புகள் பெற்றும் வாழ்வில் நன்கு உயர்வுறவேண்டும் என்றும் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் திருவருள் துணையுடன் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்றும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் அருகில், இணுவில் தெற்கு. (C-24332) கந்தசாமி மாமா, சந்திரா அத்தை.

## ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணை

### துடுப்பாட்ட சுற்றுப்போட்டி - 2002

வலிகாம வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தாரின் அனுசரணையுடன் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகத்தின ரால் நடத்தப்படும் 6 பேர், 5 ஓவர்கள் கொண்ட தோல்பந் தினாலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டிக்கு யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி :- 22.10.2002
அணி ஒழுங்கு தெரிவு :- 23.10.2002 பி.ப. 5 மணி
விண்ணப்பக் கட்டணம் :- ரூபா 100
போட்டிகள் 25.10.2002 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

*விண்ணப்பப்படிவம் பெறும் இடம்:-*
மகாலட்சுமி தேநீர் அகம்
கொக்குவில் சந்தி.

(9669) *செயலாளர்.*

## கொமர்ஷல் வங்கி யாழ்.கிளையில்

# சனிக்கிழமை வங்கிச் சேவை

கொமர்ஷல் வங்கியானது கடந்த 05.10.2002 தொடக்கம் சனிக்கிழமை வங்கிச் சேவையை யாழ்.குடாநாட்டுக்கும் விஸ்தரித்துள்ளது.

பிரதி சனிக்கிழமை தோறும் யாழ்.கிளையானது வாடிக்கையாளர்களுக்காக காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை கரும மாற்றும்.

*உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்.*

**COMMERCIAL BANK**
Our Interest Is In You.
(C-24337)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

காரைநகர், களபூமி கரப்பிட்டியந் தனை பிள்ளையார் கோயில் பாலஸ் தாபன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் காலை 6.02 மணிமுதல் 7.30 மணிவரை யுள்ள சுபவேளையில் நடைபெற வுள்ளது. நாளை மு.ப. 11.30 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் சிவஸ்ரீ சி.பாலசன் முகக்குருக்கள் தலைமையில் பாலஸ்தாபன கும்பாபி ஷேகம் நடைபெறும். (ஜ-73)

### பிரமிட் வீடியோ வெளியீடுகள்

- ☆ முரட்டுக் கரங்கள்
- ☆ நாம் பிறந்தமண்
- ☆ செல்வி
- ☆ ஆட்டோ ராஜா
- ☆ நிறம் மாறாத பூக்கள்
- ☆ ராகங்கள் மாறுவதில்லை
- ☆ உன்னை வாழ்த்தி பாடுகிறேன்
- ☆ அருணகிரிநாதன்

**வீடியோ விமல்**
*யாழ்ப்பாணம்.* (C-24342)

### வேலையாள் தேவை

போட்டோப்பிரதி இயந்திரம், தொலைபேசி என்பன இயக்குவதற் கும், சிட்டை எழுதுவதற்கும் ஆள் கள் தேவை. வயது 20 - 50இற்கு இடையில். சுயவிவரத்துடன் இருபா லாரும் விண்ணப்பிக்கவும்.

விள.இல.:- 1677
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம். (C-24341)

### நிரஞ்சனாஸ்
சங்கானை
விக்ரம், கிரன், மனோரமா நடித்த
**ஜெமினி** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.30 (S.L.T) (C-24276)

### ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
**யூத்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
(நாளை போயா தினத்தன்று காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது) (C-24275)

### நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், கார்த்திக், மீனா அருண்பாண்டியன் நடித்த
**தேவன்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நே.) (9662)

## புதிய தீபாவளி வாழ்த்துமடல்கள்

மீண்டும் வெளிவந்துள்ளது பல்வேறு அளவுகளில்
சினிமா, சாமி, பூக்கள், பறவைகள்
என அனைத்து வகைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**மக்மிலன் புத்தகசாலை**
இல.3, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

**ஸ்ரீகாந் புத்தகசாலை**
இல.165, பஸ்நிலையம்,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C-24340)

## திருமண நல்வாழ்த்துக்கள்

இன்று (19.10.2002) சனிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி திருமண மண்டபத்தில் இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணையும்

மணமகன் **சிவராஜாவும்** — மணமகள் **குணவதியும்**

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்க புதுமணமக்கள்!

- வாழ்த்துவோர் -
(C-24334) *கொழும்பு செட்டியார் தெரு நண்பர்கள்.*

## காலணி விற்பனையாளர் தேவை

காலணிகள் விற்பதில் அனுபவம் மிக்க விற்பனையாளர் தேவை. 18வயதுக்கும் 20வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விரும் பத்தக்கது. நேரில் வரவும்.

**கபிலா காலணி அகம்**
(9661) 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் இராசநாயகம்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாக வும் கொண்டவருமான மயில்வாகனம் இராசநாயகம் நேற்று (18.10.2002) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2002) சனிக்கிழமை காலை 10.00மணிக்கு கே.கே.எஸ். வீதியிலுள்ள "முருகன் இறை" (பாஸ்கரன் பூங்கா முன்பாக) இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.ஸ்ரீ மகேஸ்வரன் (உரிமையாளர் அப்பளக்கொம்பனி)
இ.ஸ்ரீ இராஜேஸ்வரன் (பாபு)
(பிள்ளைகள்)

*அப்பாத்துரை கடையருகில், K.K.S. வீதி. மல்லாகம்.* (9675)

### திருமதி ஞானப்பு மரியாம்பிள்ளை

நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வசிப் பிடமாகவும் கொண்ட ஞானப்பு மரியாம்பிள்ளை நேற்று (18.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் புஸ்பராணி (சுவிஸ்), றோக் அன்ரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயா ரும் அலோசியஸ் நவம் (சுவிஸ்), மரினா (ரஞ்சினி - அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும் திருமதி அசும்ரா ஜீனா குயின்ரன் (லண்டன்), திருமதி இன்வெண்ரா ஆறினா தாசன் (சுவிஸ்), செல்வன் (கனடா), அகிலன் (அமெரிக்கா), மனோஜன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜொசான் (லண்டன்), ஜொவானா (லண்டன்), திவ்வியங்கா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31/4, புதுவீதி, (பால்குளா ஒழுங்கை) கொய்யாத்தோட்டம்.* (9476)

தகவல்:
கிறிஸ்ரி, தேவ (பேரமக்கள்).

### திருமதி வைரமுத்து மனோன்மணி

ஆனந்தம் வடலி வீதி, பாலவளவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, ஞானவைரவர் வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து மனோன்மணி நேற்று (18.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, மயில்வாகனம் (P.H.I. மானிப்பாய்); சங்கீத பூஷணம் சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச சகோதரியும் திலகவதியின் அருமைத் தாயாரும் தனபாலசிங்கத்தின் (மிருக வைத்தியர் பகுதியில் கடமையாற்றியவர்) மாமியும் சுரேஸ்குமார் (மோகன் - சிங்கப்பூர்), கீர்த்தா (பிரான்ஸ்), காலஞ்சென்ற இளங்குமரன் மற்றும் இளங்கோவன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் குசேலா (கனடா), செல்வம் (பிரான்ஸ்), நிரஞ்சனி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் கிரிசாந்தன் (பிரான்ஸ்), நிரோசன் (பிரான்ஸ்), சியாமளன் (பிரான்ஸ்), கௌதம் (கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளம்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
திலகவதி (மகள்)
அ.தனபாலசிங்கம் (மருமகன்).

*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.* (9668)

# கடத்தப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னார். பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

கடத்தப்பட்ட இளைஞர் கண்டுபிடிக கப்பட்டதால் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் மூன்று தினங்களாக நிலவிய பதற்ற நிலை தணிந்தது. நடைபெற்று வந்த ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் என்பன முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. அலுவலகங்கள் வழமை நிலைக்குத் திரும்பின.

இக்கடத்தலின் உண்மையைக் கண்டறிவதற்காக விசாரணைகளிலேயே பொலீஸார் ஈடுபட்டிருக்கின்றனர். இக்கடத்தல் ஒரு மர்மமாக இருப்பதால் நடந்தது என்ன என்பதை அறிவதில் சகல தரப்பினரும் ஆவலாக உள்ளனர்.

இலக்கத்தகடு அற்ற வானில் வந்த இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால்அவர் கடத்தப்பட்டார் எனக் கூறப்பட்டது. இக்கடத்தலுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகள் அதனை மறுத்திருந்தனர்.

பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்ட இளைஞர் வஜட் வாக்குமூலம் அளித்தார் என்று ஒரு வானொலித் தகவல் கூறியது. புலிகள் இயக்கத்தினர் தன்னைக் கடத்திச் சென்றனர் எனவும் இரண்டு அறைகள் கொண்ட ஒரு வீட்டில் தடுத்து வைத்தனர் என்றும் வியாழன் இரவு ஒரு மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்து காட்டுப்பகுதியில் விட்டுச் சென்றனர் என்றும் அவர் வாக்கு மூலத்தில் தெரிவித்தார் என அத்தகவல் தெரிவித்தது.

இதற்கிடையில், அக்கரைப்பற்றுப் பகுதியில் பதற்ற நிலை உருவாகக் காரணமாக அமைந்த முஸ்லிம் இளைஞர் கடத்தல் சம்பவத்தில் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் இல்லையென அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

மர்மாகவுள்ள இக்கடத்தலுக்கு யார் பொறுப்பு என்பதை கண்டறிவதற்கான விரிவான விசாரணை நடத்துமாறு அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்திருக்கிறது.

நேற்றுக்காலை 9மணியளவில் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்துக்கு விரைந்த உள்துறை அமைச்சின் செயலாளர் எம்என்ஜுனைட் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையை அடுத்து செயலாளர் ஜுனைட் கூறுகையில்:-

"கடந்த 15ஆம் திகதி அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் வைத்து ஆயுதம் தாங்கிய குழுவினரால் கடத்தப்பட்ட இளைஞரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பு மேற்கொள்ளவிருந்தவேளை நேற்றுக் காலை திடீரென கண்கள் கட்டப்பட்ட நிலையில் இளைஞர் விடுவிக்கப்பட்டுள்ளார்." என்று தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அக்கரைப்பற்று சமாதான அமைப்பின் இணைத் தலைவர் எம்.ஐ.எ.புஹாரி, உள்துறை அமைச்சின் செயலாளரிடம் பின்வரும் கோரிக்கையை முன்வைத்தார்.

சமூகங்களுக்கிடையே விரும்பத்தகாத பல நிகழ்வுகளை ஏற்படுத்திய இக்கடத்தல் விடயம் பற்றி பூரண விசாரணை மேற்கொண்டு எமது பிரதேசத்தில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உண்மையை தெளிவுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இதேவேளை -

அக்கரைப்பற்றில் கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர் முஹம்மது வஜாட நேற்றுக் காலை பொலீஸாரினால் அவரது வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டார் என்று பொலீஸ் தலைமையகம் நேற்று அறிவித்தது.

இவரை கடத்தியவர்கள் யார் என்பதைக் கண்டறிய குற்றப் புலனாய்வுப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்திருக்கும் பொலீஸ் தலைமையகம், இது தொடர்பாக செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த 15 ஆம் திகதி காலை வான் ஒன்றில் சென்ற இனந்தெரியாதோரால் முஹம்மது வஜாட் கடத்தப்பட்டார். விசாரணை நடத்திய பொலீஸார், அவரைக் கண்டுபிடிக்க அக்கரைப்பற்றுப் பகுதிகளில் சோதனை நடத்தினர். விசாரணை நடத்த குற்றப்புலனாய்வுக் குழு ஒன்றும் அனுப்பப்பட்டது.

கடத்தப்பட்டவரை கண்டுபிடிக்க நேற்று முன்தினம் இரவு அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக அக்கரைப்பற்றுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், மேலதிகமாக வரவழைக்கப்பட்ட பொலீஸார் ஆகியோர் இந்நடவடிக்கைக்கு உதவினர்.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது கடத்தப்பட்ட நபரை பொலீஸார் அவரது வீட்டில் கண்டனர். தேடுதலின் போது தான் கடத்தல்காரர்களினால் மோட்டார் சைக்கிளில் கூட்டிவரப்பட்டு விடுவிக்கப்பட்டதாக அவர் பொலீஸாரிடம் கூறினார்.

பிரதமரின் பணிப்பின்பேரில் உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட், பொலீஸ் அதிகாரிகள் சகிதம் அக்கரைப்பற்றுப் பகுதிக்குச் சென்றிருக்கிறார். மீண்டும்வழமை நிலையை ஏற்படுத்துவது குறித்து அவர் சமூகத் தலைவர்களைச் சந்திப்பார்.

- இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# தமிழர் போராட்டத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ் மகிழன், இணைப்பாளர் காக்கா அண்ணன் ஆகியோர் பங்குபற்றினர். புதுவை இரத்தினதுரை மேலும் தெரி வித்ததாவது:-

இன்று உருவாகியுள்ள சமாதான சூழலில் எமது போராட்டத்தின் நியாயத்தையும், நோக்கத்தையும் சிங்கள தேசத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர் ஆகியோருக்கு விளக்கும் நோக்குடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எமது போராட்டம் தொடர்பாகவும் எமது இயக்கம் தொடர்பாகவும் சிங்கள ஊடகவியலாளர்கள் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்களுக்கு விளக்கமளிக்க இந்த நிகழ்வு உதவும்.

சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் எமக்கும் இடையிலுள்ள பெரும் இடைவெளியை நீக்குவதற்கு இந்த வாய்ப்பு உரியமுறையில் பயன்படுத்தப்படும். சமாதான சூழ்நிலையில் பலவிதமான சமிக்ஞைகளை நாம் வெளிப்படுத்திவருகிறோம். கைதிகளைப் பரிமாற்றியுள்ளோம், பேச்சு மேசையில் அமர்ந்துள்ளோம். நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் இத்தகைய செயல்கள் போன்றே இந்த நிகழ்வையும் ஏற்பாடு செய்துள்ளோம். இந்த நிகழ்வு நிச்சயம் வெற்றிபெறும் என நம்புகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராட்சி மாநாடு நடந்தது. தமிழ் உள்ளங்களின் சங்கமமாகவே அது அமைந்தது. இந்த நிகழ்வு தமிழ், முஸ்லிம், சிங்கள,தமிழக உள்ளங்களின் சங்கமமாக அமையப்போகின்றது. இந்த சங்கமம் சகல இன மக்கள் மத்தியில் நிச்சயம் எழுச்சியை ஏற்படுத்தும்.

தெற்கு, மலையகம், கிழக்கு, வன்னி, யாழ்ப்பாணம், தமிழகம், சர்வதேசம் எனப் பலதிசைகளில் இருந்தும பேராளர்கள் இதில் பங்குபற்றுகின்றனர். சகலரின் குரல்களும் இங்கு ஒலிக்கவிருக்கின்றன. எமது போராட்டத்தின நியாயத்தை அவர்களுக்கு தெரிவிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது - என்றார் புதுவை இரத்தினதுரை.

மாநாட்டின் தமிழ்க் கூடல் நிகழ்ச்சிகள் தினமும் மாலை 6 மணிக்கு முடிவடைந்ததும் பின்னர் 8 மணிவரை கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

செய்தி ஊடகங்களுக்கு தகவல் வழங்க விசேட தகவல் நிலையம் ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## கைக்குண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுத்திய போது, அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து இயந்திரத்துப்பாக்கி ஒன்றும் ஒன்பது மில்லிமீற்றர் துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

இந்த யுவதிகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். சந்தேகத்தின் அடிப்படையில் பொலீஸார் மேற்கொண்ட சோதனையிலேயே ஒரு யுவதியின் கைப்பையிலிருந்து இரண்டு குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

இவர்களுடன் தொடர்பு வைத்திருந்த மேலும் இரண்டு யுவதிகளும் இளைஞர் ஒருவரும் பொலீஸாரால் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்களுடன் இணைந்து, நாட்டின் பல பகுதிகளிலும்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர் என பொலீஸார் தெரிவித்தனர்.

கொள்ளைகள் இடம்பெறவேண்டிய இடங்களுக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்வதே இவர்களின் பணியாகுமென பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

(ஐ)

# கலைஞர்கள், படைப்பாளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யகம் எனப் பல திசைகளிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். யாழ்.நகரப் பகுதியில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட விடுதிகளில் இவர்கள் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர்.

மேலும் பெரும் எண்ணிக்கையான பிரமுகர்கள் இன்று வந்துசேர இருக்கின்றனர். அவர்களை நகரில் தங்க வைப்பதில் நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன.

சிங்கள படைப்பாளிகள், பத்திரிகை ஆசிரியர்கள், கட்டுரையாளர்கள், பத்தி எழுத்தாளர்கள், செய்தியாளர்கள் பலரும் கூட இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக யாழ்.வருகைதந்துள்ளனர்.

மாநாட்டின் இறுதியில் தினமும் நடைபெறவுள்ள விசேட கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கலைஞர்கள் குழுக்களும் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

மாநாட்டு நிகழ்வுகளை செய்தி ஊடகங்களுக்கு உடனுக்குடன் வழங்க வசதியாக வீரசிங்கம் மண்டபத்தில் ஊடகத் தகவல் பிரிவு ஒன்று விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

(ஐ-12-17-பி)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வணங்களைப் பலப்படுத்த வேண்டும். இவற்றைச் செய்யாவிடினும் இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க எவ்வளவு பணம் வழங்கினாலும் அதனால் பயன் ஏற்படாது.

யுத்தத்தினால் வடக்கு - கிழக்கில் சீர்குலைந்திருக்கும் சுகாதார சேவை, தண்ணீர் விநியோகம் உட்பட அனைத்து சேவைகளையும் புனரமைக்க உலக வங்கியினால் வழங்கப்படும் பணம் செலவிடப்படும் - இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)

## சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நபர்கள் பயமுறுத்தல் விடுத்திருக்கின்றனர் என்பது பற்றிய தகவல்கள் நீதிமன்றுக்கு கிடைத்திருப்பதாக நீதிவான் தெரிவித்தார். நீதிமன்ற அதிகாரிகளுக்கு பயமுறுத்தல் விடுப்பதை நிறுத்தாவிடின் சந்தேக நபர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்து அவர்களை மீண்டும் விளக்க மறியலில் வைப்பதாகவும் நீதிவான் விசாரணையின் போது கூறினார்.

40ஆவது சந்தேக நபர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதனால் அவரைக் கைது செய்ய நீதிவான் பகிரங்க பிடியாணை பிறப்பித்தார்.

மேல் விசாரணை நவம்பர் மாதம் 8ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

(ஐ)

# அம்பாறையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆத் தொழுகையின் பின்னர் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களின் போது அரசைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் எம்.பிக்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கப்பட்டது.

திகாமடுல்ல மாவட்ட மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. கல்முனைப் பிரதேசத்தில் பெருமளவு பொலீஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கல்முனைப்பகுதியெங்கும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. 'அரசே' முஸ்லிம்களின் உரிமைகளை வழங்கு, 'அரசே' முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரி!, தன்னாட்சி உள்ள அதிகார அலகு முஸ்லிம்களின் தார்மீக உரிமை' நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஒன்பது முஸ்லிம் எம்பிக்களும் சத்திய வேள்வியில் நித்திய திலகங்கள்' போன்ற வாசகங்கள் அவற்றில் காணப்பட்டன.

மு.கா.எம்பிக்களின் போராட்டத்தை ஆதரித்து பல பள்ளிவாசல்கள், முஸ்லிம் சம்மேளனம், முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட மத்திய குழு, முஸ்லிம் அமைப்புக்கள் என்பன இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

ஆர்ப்பாட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் துஆப் பிரார்த்தனை நடத்தப்பட்டது. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. வாகனங்கள் ஓடவில்லை.

இதேவேளை -

நேற்று காலை ஏழு மணியளவில் மின்னேரியா இராணுவ முகாமில் இருந்து விசேட பயிற்சி பெற்ற 75 இராணுவத்தினர் விசேட ஹெலிகொப்டர் ஒன்றில் கல்முனைக்கு கொண்டு வரப்பட்டனர். இந்த இராணுவத்தினர் பொலீஸ் நிலையத்தில் முகாமிட்டுள்ளனர்.

நேற்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது கலவரங்கள் ஏதும் நிகழ்ந்தால் அவற்றைக் கட்டுப்படுத்தவே இந்த விசேட படைப்பிரிவு கல்முனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்படவில்லை. பொலீஸார் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஐ-12)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் கந்தப்பு (சின்னராசா)

(யாழ். இளையதம்பி வித்தியாசாலை முன்னாள் ஆசிரியரும், நல்லூர் வட்டார கல்வி அதிகாரியின் முன்னாள் உதவியாளரும், வட இலங்கை சங்கீத சபை முன்னாள் செயலாளரும்)

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் கந்தப்பு 16.10.2002 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் குணமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் Dr.குணரஞ்சினி (கனடா), காலஞ்சென்ற குணவதி மற்றும் சிறி கந்தகுமார், சிறி கந்தராஜா, சிறி கந்தசீலன் (டுபாய்) ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr.சிறிரஞ்சன் (கனடா), கலா (கொமர்ஷல் வங்கி வெள்ளவத்தை), பாமினி, உமாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பிரேமகீதன் மற்றும் திவ்யா, வந்தனகீதன், சஞ்சீவன், டிலனி, கோகுல், பவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2மணிக்கு கனத்தை பொது மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும். 19.10.2002 சனிக்கிழமை முற்பகல் 10மணிமுதல் ரேமன் மலர்சாலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக அனுமதிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு.
T.P. No :362384 (C-24343)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

I B M S
1999 Jaffna
2000 Chankanai
2001 Nelliyady
2002 ?
வருகிறோம் தென்மராட்சிக்கு 2002 இல்
IBMS@CHAVAKACHCHERI
Institute of Business Management Studies
கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
19-10-2002
ACTOS

குறைந்த கட்டணத்தை அறிமுகப்படுத்திய
SERENDIB
விமான சேவை
மாற்றத்தை உணருங்கள்....! கட்டணத்தை சிந்தியுங்கள்....!
உறுதிப்படுத்திய பயணச்சீட்டுக்கள்
விபரத்தை எம்மிடம் கேளுங்கள்.
தொடர்பு : செரண்டிப் மனோ, 13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(24 மணி) 0777/517019, 0777/391038, 021/222 2007
(C/24314)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| சந். | சனி ரா. | | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | கேது | சூரி.▲ வெள். | செவ். புதன் |

# இந்த வார இராசி பலன்

## 20.10.2002 ~ 26.10.2002

**மாற்றம்:**

**20.10.2002இல் ரேவதி - சந்திரன் மீன ராசியில் நிற்கும்.**

**அரசியலில் மக்கள் கருத்துக் கணிப்பு, தேர்தல் அடுக்குகள் என்பன நடக்க இடம் உண்டு. அரசியல்வாதிகள் அபிப்பிராயப் பேதப்படுவர் திடீர் மாற்றம் வரும். அரசியலில் அரசின் போக்கு மாறும். பேச்சுக்கள் தொடரும் நிலை ஏற்படும். இன்றிருப்போர் நாளை இருப்பாரா? என்ற நிலை.**

**இந்தியாவில் அரசியல் சலசலப்பு ஏற்படும். வடக்கு அரசியல்வாதிகளால் தெற்கு அரசியலில் பிரச்சினைகள் வரும். தீவிரவாதப்போக்குத் தொடரும். மத்தியகிழக்கில் ஈராக், ஈரான், பலஸ்தீனம் போன்ற நாடுகளில் அழிவுகள் தொடரும். மேற்கு நாடுகளின் போக்கு முஸ்லிம் நாடுகளில் கொந்தளிப்பைக் கொடுப்பதுடன் அழிவுகளும் தொடர இடமுண்டு. பசுபிக், இந்து சமுத்திப் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தம், மழை என்பனவற்றில் இயற்கையழிவுகள் ஏற்படும்.**

### மேடம்

இன்பம் - துன்பம் எல்லாம் மனிதர்களின் மனங்களைப் பொறுத்தது. தொழில்நிலையில் ஓடியாடித் திரிந்து பொருள் தேட முற்படுவீர். உறவகளுக்காக ஓடி ஓடிச் செயற்படல். புதிய பொருள் சம்பந்தமாகப் பேசுதல், அரச அதிகாரிகளுடன் பேசுதல், உதவி பெறுதல், அரசியல் வாதிகளின் உதவிகள் கிடைத்தல் என்பன நடக்கும். அதிக ஆசையும், அதிக கற்பனையும் ஆபத்துக்களைக் கொண்டுவரும். படபடப்பு, வயிற்று வருத்தம் வரும். நீதித்துறை, குருத்துறை, விவசாயத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர். மாணவர்களுக்கு கல்வியில் சித்திகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### இடபம்

நாம் பெற்ற பெரும் செல்வம் 'தண்ணீர்'. குடிக்க, குளிக்க, பூமித் தாய் குளிர்ந்து பயிர்வளர்த்து வயிற்றினை நிரப்ப, மின்சாரம் பெற எமது மனம், உடல் குளிர தண்ணீர் உதவுவது போன்று நண்பர்கள் உதவுவார்கள். தொழில்பீடத்தில் உதவிகள் கிடைக்கும். அயலவர்கள் உதவுவார்கள். தூர இடங்களிலிருந்து செய்திகள் அல்லது உறவினர்கள் வருவார்கள். வாய்வுத்தொல்லை, உஷ்ணபீடைகள் கொடுக்கும். மாணவர்களுக்கு ஏமாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரத்துறை, ரீ.வி., டெக், கம்பியூட்டர் போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### மிதுனம்

ஊருக்கு வெளிச்சமாக இருக்கும் சிலர், வீட்டுக்குள் இருட்டாக இருப்பது விதியின் வேலையாகும். உங்களுக்கு மனதில் எத்தனை பாரம்? அவசரத்தில் கொட்டித் தீர்க்காதீர்கள். தொழில்ஸ்தானத்தில் பதற்றம், மாற்றங்கள் சகஜமாகும். மற்றவர்களின் அலுவலில் தலையிட்டு அவமானப்படுவீர்கள். குடும்பத்தில் கலகம் ஏற்படலாம். எதிரிகளை வெல்லுதல், திடீர் பணவரவு, இடாம்பீகப் பொருள் வரவு என்பன ஏற்படும். நெஞ்சுநோ, சலத்தொல்லை, வாய்வு, உஷ்ணபீடை என்பன வரும். மாணவர்களுக்கு நண்பர்கள் உதவுவார்கள். தகவல்துறை, வங்கித் துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்*

### கடகம்

உண்மையான குற்றவாளிகள் ஒருநாள் அகப்படுவார்கள். தொழில் ஸ்தானத்தில் இந்த அனுபவம் வரும். பிறருக்கு ஆலோசனை சொல்லல், வீடு, வாகன மாற்றம், எதிர்ப்பாளரால் நன்மையான உதவிகள் கிடைத்தல், உறவினர்களின் எதிர்ப்புகள் ஏற்படும். மாணவர்களுக்கு நன்மை, தீமை கலந்த பலன்கள் நடக்கும். பொருளால் அவமானப்பட இடம் உண்டு. நாரிப்பிடிப்பு, சலத்தொல்லை, உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும். அரசியல்துறை, ஹோட்டல்துறை, வியாபாரத்துறை, நகைத்துறை, குருத்துறை, இசைத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### சிங்கம்

அவசரம் - அவசியம் காலநேரத்தில் ஏற்படும் சந்தர்ப்பங்களைப் பொறுத்தது. தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் கொடுக்கும். செய்திகளால் மகிழ்ச்சி. பணவரவு, இனஜனங்களின் உதவிகள், புதியவர்களைச் சந்தித்தல் போன்றன நடக்கும். சளித்தொல்லை, நாரி, கழுத்து, தொண்டைநோ வரும். மாற்றங்கள் கொடுக்கும். குருத்துறை, பிரயாணத் துறை, செய்தித்துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

### கன்னி

மனித ஆசைகளைக் கட்டுப்பாடாகத்தான் பூர்த்திசெய்யவேண்டும். சட்டக்கரங்களுக்கு மக்கள் எப்பொழுதும் மதிப்புக்கொடுக்க வேண்டும். அல்லது தண்டனை கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் சகஜம். பெரியவர்களின் கண்டிப்பு, பொருள் தவறுதல், பணவரவு, சகோதரங்களுக்குச் சிறப்பான மாற்றங்கள் என்பன கொடுக்கும். சளி, கை, கால், நாரிப்பிடிப்பு, தலை வருத்தங்கள் வர இடம் உண்டு. குருத்துறை, செய்தித்துறை, வியாபாரம், தோட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

### துலாம்

ஈராக்மீது எந்த ஜனநாயகப்படி அமெரிக்கா குண்டு மாரி பொழிகின்றது? ஐ.நா. அதாவது உலகமகா சபை கூட அமெரிக்கா செய்வதை நியாயப்படுத்துகின்றதா? இதேபோன்றுதான் ஜனநாயகம் பேசும் சிலரின் அதிகாரத்தனம், அப்பாவிகளை நசுக்க முயலுகின்றது. உங்கள் தொழில்ஸ்தானத்தில் இதனால் உங்களுக்கு மனப் போராட்டம் வரும். பொருள்வரவு, குடும்பத்தினருக்கு உதவுதல், அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைத்தல் என்பனவும் தொண்டைநோ, கை, கால் உளைவு, நாரிப்பிடிப்பு, காய்ச்சல் என்பனவும் கொடுக்கும். வாகனத்துறை, சாப்பாட்டுக்கடை, செய்தித்துறை, குருத்துறை, சினிமாத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

### விருச்சிகம்

அரசியல் தலைவர்களுக்கு எது பெரிது? மக்களின் வோட்டுத்தான் பெரிது. அதன் பின்பு....? அதே போன்று - உங்கள் தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் சுயநல சிந்தையால் உங்களுக்குத் தொல்லைகள் கொடுக்க இடம் உண்டு. அயலவர்கள் புறம் கூறுவர். பொருள் இழப்புக்கள் வரலாம். தூரத்துச் செய்திகள் வரும். அடிக்கடி கோபம் வரும். எதிரிகளில் கவனம். மாற்றங்கள் சகஜம் உஷ்ணபீடைகள், தொண்டை, நாசி, கண் சம்பந்தப்பட்ட வருத்தம் வரலாம். குருத்துறை, வங்கித்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

### தனுசு

அடிக்கடி மாற்றங்களால் பரவசப்படுவது சகஜமாகும். உஷ்ண வேகத்தால் வரும் வெகிர்ப்பரு வேதனையை உப்புத்தண்ணீர் (கடல்நீர்) ஸ்நானம் ஓரளவு தணிக்கலாம் அல்லவா? தொழில்ஸ்தானத்தில் நல்ல முன்னேற்றம், பெரியவர்களின் ஆதரவு இருக்கும். படிப்படியான மாற்றங்களின் அறிகுறிகள் தென்படும். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிதல், தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைக் கொடுக்கும். கைகால் பிடிப்பு, சளி, தலைப்பாரம் கொடுக்கும். செய்தித்துறை, குருத்துறை, மருந்துத் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு.*

### மகரம்

மனிதர்கள் பலவீனமானதும் பிறர் எல்லாவற்றையும் மெல்ல, மெல்ல பறித்துவிடுவார்கள். தொழில்ஸ்தானத்தில் இளமையானவர்கள் துள்ளுவார்கள். அடிக்கடி பதற்றப்படுவீர்கள். இடமாற்றங்கள் சகஜமாகும். பணக்கஷ்டம், வீட்டில் பொருமல், வாகனச் செலவுகள் வரும். கால் வருத்தம், நரம்புப்பிடிப்பு, கழுத்து உளைவு என்பன கொடுக்கும். சினிமாத்துறை, வங்கித்துறை, ஹோட்டல், தோட்டம் போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

### கும்பம்

மாடு தன் கன்றுக்கு புல் சேர்த்து வைக்கின்றது? வளர்ந்துவிட்டால் பறந்து செல்லாதா? தொழில்ஸ்தானத்தில் சில விஷயங்களைக் கண்டும் காணாமல் இருப்பீர்கள். பொருள் செலவு அதிகரிக்கும். பொருள்கள் பிரயாணங்களில் தவற இடமுண்டு. நண்பர்களால் தொல்லைகள் வரும். இனஜன வாக்குக்கலகம் வரலாம். வீடு, வாகன வசதிகள் சிலருக்குக் கிடைக்க இடமுண்டு. கால் உளைவு, சலத்தொல்லை, சளித்தொல்லை, தலையிடி வரும். இசைத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்றதுறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

மகாதேவா ஜோதிடம்

### மீனம்

காவிரித் தண்ணீரில் ரஜினியின் அரசியல் அலை தொடங்குவது நல்ல சகுனம். ரஜினிக்கு எதிர்ப்புக்கும் வராமல் இருக்காது. தொழில்ஸ்தானத்தில் நீங்களும் ஏதாவது காரணம் காட்டி பிரச்சினைகளைத் தொடர இடம் உண்டு. மறதியால் பொருள் இழப்பு வரும். தூரத்துச் செய்திகள், பணவரவு, தெய்வபக்தி, பெரியவர்களின் உதவிகள், இடமாற்றங்கள் என்பன ஏற்படும். கால்வருத்தம், சளி, நரம்புவருத்தங்கள் என்பன வரும். மருந்துத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

# குமுதினியின் சேவை குறித்து விளக்கமளிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

'குமுதினி' படகு தென்னிலங்கை உல்லாசப் பயணிகளை ஏற்றியிறக்கப் பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து படகுக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதிய 'உதயனில்' குமுதினிப் படகு மீண்டும் சேவைக்குத் திரும்புமா என்ற தலைப்பில் வெளியான செய்திக் கட்டுரை தொடர்பாகவே வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் அனுப்பிய கடிதத்திலேயே இந்த விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

15ஆம் திகதிய 'உதயன்' நாளிதழில் 'குமுதினிப் படகு மீண்டும் சேவைக்குத் திரும்புமா' என்ற தலைப்பில் செய்திக் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. இக்கட்டுரையானது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் என்ற முறையில் எம்மையும் எமது அதிகாரசபையையும் கடுமையாக விமர்சிக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய பதிலளிக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்துள்ளது.

இருப்பினும், இச்செய்தியின் கடைசிப் பந்தியில் மேற்படி படகானது நயினாதீவு நாகவிகாரைக்கு தென்னிலங்கை உல்லாசப் பிரயாணிகளை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப்பட்டதாகவும் இதன்போது, நாளாந்தம் பெருந்தொகைப் பணம் வசூலிக்கப்பட்டதை மறுக்கவோ மறைக்கவோ முடியாதென்றும் கூறப்பட்டுள்ளது. இலாப நோக்கினை அடிப்படையாகக் கொள்ளாத மேற்படி படகுச் சேவையானது அதற்கெனத் தீர்மானிக்கப்பட்ட நேர அட்டவணையின்படி, சேவையாற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்ட நிலையில் நயினாதீவுக்கு, குறிகாட்டுவானில் இருந்து ஆள்களை ஏற்றி இறக்க மேற்படி படகு பாவிக்கப்பட்டதா என்பதையும், அவ்வாறாயின் எந்நாள்களில் எந்தெந்த நேரங்களில் அவ்வாறு பாவிக்கப்பட்டது என்பதையும், இதற்கு உத்தரவிட்டது யார், அனுமதி கொடுத்து யார், வசூலிக்கப்பட்ட பணம் எவ்வளவு போன்ற விடயங்களையும் ஒருவார காலத்திற்குள் எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம)

### கேதாரகௌரி விரதம் குறித்த நூல் வெளியீடு

கரவெட்டி,ஒக்.19

கேதாரீஸ்வரர் விரத வரலாறு, அனுஷ்டிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் தொடர்பான 'கேதாரீஸ்வரர் விரத மகிமை' என்ற நூல் பொலிகண்டி, மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. (எ-70)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

அரியாலை கலைமகள் வீதி ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

இன்று காலை 8மணிமுதல் அடியார்கள் பால்க்காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். மண்டலாபிஷேகம் எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி 108 சங்காபிஷேக நிகழ்வுடன் முடிவு பெறும். (ம-15)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொட்டகைகள்

தென்மராட்சி,ஒக்.19

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் எண்பது அடி நீளமான வெளிநோயாளர் தங்கும் கொட்டகையும், சமையல் அறையும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - அம்புலன்ஸ் விடும் கொட்டகை ஒன்று சாவகச்சேரி வணிகர் மன்றத்தினால் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

குண்டு வீச்சுகளினால் சேதமடைந்துள்ள ஆஸ்பத்திரியில் கட்டடங்களிலிருந்து மரங்கள், ஓடுகள், சலாகைகள் என்பன பெறப்பட்டு மேற்படி கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தினமும் 200இற்கு மேற்பட்டோர் மேற்படி ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவதனால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியை அடுத்து இந்தக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)



**சுன்னாகம் தெற்கு, சிவபூதராயர் ஆலயத்தில் பெரியபுராணம் தொடர் விரிவுரை நிகழ்த்திய புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி ஆசிரியர் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன், உற்சவகால இறுதிநாளன்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். படத்தில் ஆலய பரிபாலன சபை செயலாளர் செ.அன்னராசா பொன்னாடை போர்த்துவதைக் காணலாம். (ம-27)**

# கோழி வளர்ப்புப் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.19

நல்லினக் கோழிகளை வளர்ப்பது தொடர்பான செய்முறைகளை உள்ளடக்கிய பயிற்சிக் கருத்தரங்குகள் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் இவ்வாரம் நடைபெறவுள்ளன.

யாழ்.பிராந்திய கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்குகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வடமராட்சியிலும், புதன்கிழமை வலிகாமத்திலும் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் கொழும்பிலிருந்து வருகைதரும் கால்நடை வைத்தியர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயப் போதனாசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரையாற்றுவார்கள்.

கால்நடைத் தீவன, மருந்து வகைகள் விற்பனையாளர்கள், விவசாய பீட மாணவர்கள் போன்றோரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)





# அதிசய உப உணவுப் பொருள்!

மூலிகைகளின் அரசன்

# ரிஷி காளான்

இது இப்போது மலேசியா DXN நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு, இந்தியா உட்பட 22 நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

ரிஷிகாளான் எம் நாட்டிற்கும் அறிமுகமானது எம் மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இக்காளானைக் கொண்டு தயாரித்த மாத்திரைகள், கோப்பி, பற்பசை முதலியன இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதன் அநேக பயன்களைப் பல கருத்தரங்குகளில் ஆதாரத்துடன் எடுத்து விளக்க இதில் பிரசித்தி பெற்ற Dr.வெங்கட்ரமணி அவர்கள் இந்தியாவிலிருந்து வருகிறார்.

இந்த ரிஷி காளான், 5000 ஆண்டுகளுக்கு முன், சீன, ஜப்பானியர்களால் அறியப்பட்டது. 1972இல் ஜப்பானில் உள்ள கிளியோடா பல்கலைக்கழக, தாவரவியல் ஆய்வாளர்கள், ரிஷியை வெற்றிகரமாகப் பயிரிட்டார்கள்.

**ரிஷி காளான்** - மனித உடலில் அழிந்த கலங்களை அகற்றி, புதிய கலங்களை உருவாக்கி, தசை நார்களை சீராக இயங்கச் செய்து, உடலில் உள்ள நோய்களைக் குணமாக்கி, நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது.

**ரிஷி காளான்** - நோய் தடுப்பிற்கும், நீண்ட ஆயுளுக்கும் மிக முக்கியமானது. கடினமான நோய்களான புற்றுநோய், ஆஸ்துமா, ஒவ்வாமை, அதிகப்படியான கொழுப்பு, கொலஸ்ட்ரோல், ஈரல்நோய், சலரோகம், சோர்வு, உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம் இப்படிப்பட்ட ஆட்கொல்லி நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கிறது.

| திகதி | நேரம் | இடம் | முகவரி |
|---|---|---|---|
| 19.10.2002 | மாலை 04.30 | ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் நூலகம் | இணுவில் |
| 20.10.2002 | காலை 10.00 | வேலாயுதம் மகா வித்தியாலயம், புலோலி | பருத்தித்துறை |
| 20.10.2002 | மாலை 04.00 | மகளிர் கல்லூரி, யாழ்.வீதி | மானிப்பாய் |
| 21.10.2002 | காலை 10.00 | நகரசபை மண்டபம் | சாவகச்சேரி |
| 21.10.2002 | மாலை 05.00 | யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம் | யாழ்ப்பாணம் |
| 22.10.2002 | மாலை 05.30 | தமிழ் மத்திய மகாவித்தியாலயம், கண்டி றோட் | வவுனியா |
| 23.10.2002 | மாலை 05.30 | விக்கினேஸ்வரா வித்தியாலயம், பிரதான வீதி | திருகோணமலை |
| 24.10.2002 | மாலை 05.00 | சாள்ஸ் மண்டப் ஆயர் இல்ல மத்திய நிலையம் | மட்டக்களப்பு |
| 25.10.2002 | மாலை 05.00 | அஸ்ராஜ் மகாவித்தியாலயம் | அக்கரைப்பற்று |
| 27.10.2002 | காலை 10.30 | சிந்தி சென்ரர், கொள்ளுப்பிட்டி | கொழும்பு - 03 |

## ரிஷி காளான் கிடைக்கும் முகவர் நிலையங்கள்

**கொழும்பு**

**திரு.மு.கணேசமூர்த்தி**
ரூம் இல.1,
பம்பலப்பிட்டி
தொடர்மாடி சனசமூக நிலையம்,
கொழும்பு - 04.
556203, 504084

**திரு.நா.சிவகுமாரன்**
16 1/1, மூர் றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
360490

**திரு.ராதாகிருஷ்ணன்**
S.26/2ஆவது மாடி,
கொழும்பு சென்றல்
சுப்பர் மார்க்கட்,
கொழும்பு - 11.
336375, 436890

**திரு.மு.மாரிமுத்து**
களிக்கோஸ்
114/1, 3ஆம் குறுக்குத்தெரு
கொழும்பு - 11.
528209, 439414

**தெஹிவளை**

**திருமதி விஜயலெக்சுமி பெரியசாமி**
BJ 124/3, டட்லி சேனநாயக்க
மாவத்தை,
தெஹிவளை.
01-739671

**கண்டி**

**திருமதி ரஷீட் கமலோசனி**
265, பேராதனை வீதி, கண்டி.
08-238783

**திரு.S.தேவராஜன்**
சென்ரல் மெடிக்கல்,
92, தலதா வீதி, கண்டி.
08-223677, 08-226443

**திரு.குமார்**
194A, D.S.சேனநாயக்க வீதி,
கண்டி.
08-237053, 08-225039

**சிலாபம்**

**திரு.அன்ரனி செபஸ்தியான்பிள்ளை**
42/1, குருநாகல் றோட்,
சிலாபம்.
032-22495

**மட்டக்களப்பு**

**திரு.C.இராஜரட்ணம்**
7/9, ஒலிவ் லேன்,
மட்டக்களப்பு.
065-23374

**திரு.யு.தேவேந்திரராஜா (காந்தி)**
513/36, கண்ணகை அம்மன்
கோவில் வீதி,
மட்டக்களப்பு.
065-23482

**அக்கரைப்பற்று**

**திரு.M.R.M. சிப்லி ரபீக்**
கிழக்கு வீதி,
அக்கரைப்பற்று.
067-77427, 072-863660

**திருகோணமலை**

**டாக்டர் ராமச்சந்திரன்**
ராம் கிளினிக்,
57, பிரதான வீதி,
திருகோணமலை.
026-22207

**வவுனியா**

**டாக்டர் உமாபதி**
ஸ்ரீ சங்கர் மெடி கிளினிக்
5ஆவது லேன்,
மன்னார் றோட்,
வவுனியா.
024-21241, பக்ஸ்: 024-21283

**கிளிநொச்சி**

**டாக்டர் K.ஜீவரட்ணம்**
8, ஆயுர்வேத வைத்தியசாலை,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி,
024-21047

**திரு.S.பாலேந்திரன்**
பிரதான வீதி,
கிளிநொச்சி.
078-619294

**யாழ்ப்பாணம்**

**டாக்டர் ஈஸ்வரி கந்தையா**
நகரசபை லேன், மானிப்பாய்.
021-2222554

**திரு.T.V.கிருஷ்ணசாமி**
இந்திராணி வாசம், சந்தை வீதி,
உரும்பிராய்.
021-22223392, 021-2222654

**திரு.வி.விஜயநேசன்**
36, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்
021-2223123, 021-2223299

**திரு.S.தயாளன்டேஸ்வரன்**
மாரியம்மன் மிலேனியம் ரெலக்ஸ்,
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
070-213073, 070-212778

**திரு.O.பாலசுப்பிரமணியம்**
துன்னாலை மத்தி, கரவெட்டி.
070-212807

**Dr.எஸ்.ராஜபூபதி**
ராஜாராஜபதி மெடிக்கல் கிளினிக்,
மீசாலை தெற்கு, மீசாலை.
070-212538

**திரு.எஸ்.பரமானந்தம்**
133, ஸ்ரான்லி வீதி
(அத்தியடி உபதபாற்கந்தோர் அருகில்), யாழ்ப்பாணம்.
0777 730708

*DXN* நிறுவனம் மலேசியன் தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின்கீழ் ISO 9002 சான்றிதழ் வழங்கப்பட்டு. ISO 14001 சான்றிதழ்மூலம் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது சுகாதார பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டது. 2500இற்கு மேற்பட்ட விநியோகஸ்தர்கள் எம்மிடம் இருக்கின்றார்கள்.

DXN

# MAGNUM INVESTMENTS (PVT)LTD.

**15, Stamboul Place,**
**Colombo - 03.**
Tel.: 575753, 074-723396 Fax: 074-723396
E-mail: info@magnumsl.com

தற்போது 22 நாடுகளில் விற்பனையாகின்றது

(C/24318)


## நூல்வெளியீடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கவிஞர் இ.முருகையனின் 'உண்மை' நாடகநூல் வெளியீட்டுவிழா 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வை முன்னிட்டு நடைபெறமாட்டாது என்றும் -

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குறித்த நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.) (எ)

## வைத்தியர் விளக்கமறியலில்!

புத்தளம்,ஒக்.19

புத்தளம், மதுரங்குளி பகுதியிலுள்ள தனியார் வைத்தியரொருவர் தன்னிடம் சிகிச்சை பெறவந்த இளம் யுவதியொருவருக்கு ஊசிமூலம் மயக்க மருந்தை உடலில் ஏற்றி பாலியல் வல்லுறவு கொண்டார் எனக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

முந்தல் பொலீஸாரால் அவர் புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் ஏ.ஏகநாதன் முன் ஆஜர்செய்யப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் எதிர்வரும் 28ஆம் திகதி வரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்திவைத்தார். (ம)

## உடற்கல்வி டிப்ளோமா விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

எனவே, இக்கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று மாலைக்குள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -தவறும் பட்சத்தில் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு, வெற்றிடம் நிரப்பும் பட்டியல்மூலம் மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்றும் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திருமதி என்.தங்கராசா தெரிவித்துள்ளார். (ம-5)

## தொலைபேசிக் கட்டணம் 15 சதவீதம் அதிகரிப்பு!

ரெலிகொம் தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளன. இதற்கான பரிந்துரை ஒன்று தொலைத் தொடர்பு ஆணைக்குழுவினால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ரெலிகொம் நிறுவனம் கட்டணங்களை அதிகரிக்கிறது. கடந்த மே மாதம் ரெலிகொம் தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் 21 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சுன்னாகம் றோட்டரக்ற் அவசர கலந்துரையாடல்

சுன்னாகம் றோட்டரக்ற் கழகத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கழக அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து கழக அங்கத்தவர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு அதன் தலைவர் கேட்டுள்ளார்.(எ-5)

## வெள்ளைப்பிரம்பு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

வாழ்வகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமும், கலை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் வாழ்வகத்தின் உபதலைவர் ஆ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் ஆசியுரைகளை வாழ்வக நிர்வாகி செல்வி ஆ.சின்னத்தம்பியும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். கௌரவவிருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக யூனியன் கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்வர். (எ-5)

# வரலாறு படைத்த பெண்கள் சேனை கிளிநொச்சி நகரில் எழுச்சி கொண்டது!

வரலாற்றுப் பெருமை மிக்க யாழ். - கண்டி வீதி வழியாக யாழ் நகரமே நகர்ந்து சென்றது இதுவரை மூன்று தடவைகள்.

முதலாவது நகர்வு 1995இல் ஏற்பட்ட வரலாறு காணாத இடப்பெயர்வின்போது ஏற்பட்டது.

ஆறு வருடங்களாகப் பிரிந்திருந்த தமது உறவுகளான விடுதலைப் புலிகளை வரவேற்கத் திரண்டெழுந்த மக்கள் கூட்டம் இரண்டாவது தடவையாக முகமாலைக்கு நகர்ந்தது.

கடந்த 10ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ள மூன்றாவது தடவையாகவும் கண்டி வீதியூடாக யாழ். மக்கள் வெள்ளமெனப் பாய்ந்தனர்.

சமூகத்தின் பலத்த ஒழுங்குமுறைக்குள்ளும் பேரினவாதிகளின் அடக்குமுறைக்குள்ளும் ஒடுக்கப்பட்டிருந்த ஈழப் பெண் இனம் அடக்குமுறைகளை உடைத்தெறிந்து அவற்றுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்திய வீர வரலாற்றின் சுவடாகக் கொண்டாடப்பட்ட தமிழீழ பெண்கள் எழுச்சி தினத்தில் கலந்துகொள்ளவே இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் மக்கள் வன்னி நோக்கி விரைந்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முதலில் வீரகாவியமான பெண் போராளியான 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 15ஆவது ஆண்டு நினைவு நாளிலே நடந்தது அந்தப் பேரெழுச்சி.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்ல வன்னி, வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய தமிழீழப் பிரதேசங்கள் எங்கிலும் இருந்து அலைமோதி



வந்தது ஜனசமுத்திரம்.

கண்டி வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து புலிகளின் இராணுவ அணிவகுப்பு ஆரம்பமானது. மகளிர் படையணிகளான மாலதி படையணி, சோதியா படையணி, திலகா படையணி, சிறுத்தைப் பெண் புலிகள் அணி, குட்டிசிறி மோட்டார் மகளிர் படையணி, கடற்புலிகளின் மகளிர் அணி, ஆசிரியர் படையணி, பொன்னம்மான் கண்ணிவெடி மகளிர் படையணி, அன்பரசி படையணி, விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி, தேசிய துணைப்படையணி, காவல் துறைப் படையணி என 11 படையணிகளினதும் இராணுவ அணிவகுப்புக்கள் கண்டிவீதி ஊடாக கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை நோக்கி ஆர்ப்பரித்து நகர்ந்தன. ஆர்.பி.ஜி., எல்.எம்.ஜி, ஏ.கே. 47, ரி.56 ரகத் துப்பாக்கி என ஒவ்வொரு படையணிகளும் ஒவ்வொரு வகையான சுடுகலன்களைத் தாக்கி அணி வகுத்து வந்தன.

வைத்த விழி வாங்காது பார்த்து நின்ற மக்கள் கூட்டத்தின் முன்னால் விறுநடை போட்டு வந்தது வீரமங்கையர் படையணிகள்.

ஆர்ப்பரித்த மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தமிழீழ காவல் துறையினர் அன்றையதினம் சற்று அதிகமாக சிரமப்படவேண்டியிருந்தது என்பதை காவல்துறை அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டிருந்தார்.

அணிவகுப்பைத் தொடர்ந்து ஊர்திகள் பவனி வந்தன. புலிகளின் மகளிர் படையணிகள் ஏற்பாடு செய்த இந்த ஊர்திகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதைகள் பேசின.

பெண் அடிமைத்தனத்தையும் அடக்குமுறையையும் காட்டிய ஊர்தியில் இரும்புக் கம்பியினாலான கூடு ஒன்றுக்குள் பெண் ஒருவர் அடைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு அடக்குமுறைக்கு உட்பட்ட பெண் எவ்வாறு அந்த அடக்குமுறை விலங்கொடித்து வெளியே வந்தாள் என்பதைக் காட்டியது மற்றோர் ஊர்தி.

வெளியே வந்த பெண்ணினம் இன ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிராகப் போராடி வெற்றி கொண்ட வரலாற்றையும் அவர்கள் படைத்துக்கொண்டிருக்கும் சாதனைகளையும் காட்டியது இன்னுமோர் ஊர்தி.

நவீன ஆயுதங்கள், ஆட்லறி சுடுகுழல்கள், பீரங்கிகள் என்பவற்றைத் தாங்கிய வாகனத்தில் பெண்கள் இயக்குவதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்தனர். கடற்புலிகளின் மகளிர் படையணியின் படகு ஒன்றும் ஊர்தியில் கலந்துகொண்டது. கடலிலே காவியம் படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலிப் போராளியான உதயச் செல்வியின் பெயர் அந்தப் படகுக்கு சூட்டப்பட்டிருந்தது.

கடற் கலங்களைத் தகர்த்தெறிய வல்ல நவீன ஆயுதங்கள் அதில் பொருத்தப்பட்டிருந்தன.

விளையாட்டரங்கின் மத்தியை வந்தடைந்த படையணிகள், அங்கு நிகழ்த்திய அணிவகுப்பு மரியாதையைப் புலிகளின் மகளிர் படையணிகளின் தளபதிகளான கேணல் விதுஷா, கேணல் துர்க்கா மற்றும் படையணிகளின் தளபதிகள் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

ஏனைய தளபதிகள் வரிசையில் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை, கேணல் பானு, கேணல் ஜெயம், பொட்டம்மான், கேணல் கடாபி போன்றோர் தமக்கென அமைக்கப்பட்ட பந்தலில் அமர்ந்திருந்தனர்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை பெண்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைக் குணங்கள் என்று பழைமைவாதம் பேசியோர் இந்த அணிவகுப்புகளைப் பார்த்து வாயடைத்துப் போயினர். பெண்களின் கால்கள் அடுக்களைக்குள் தான் நடைபோடவேண்டும். அவர்களின் கைகள் அகப்பைதான் ஏந்தவேண்டும் என்ற வரட்டு நியதிகளைத் தமது பூட்ஸ் கால்களின்கீழ்போட்டுத் துவம்சம் செய்த மங்கையர் முன் வெட்கித் தலைகுனிந்தது பழைமைவாதம்.

பெண்களும் ஆண்களும் நிகராக எதனையும் சாதிக்கக்கூடியவர்கள் என்று நிருபிக்கப் புறப்பட்ட பெண்புலிகள் வரிசையில் மூத்த உறுப்பினர்களில் ஒருவராகத் தன்னை இணைத்துக்கொண்டவர் மாலதி.

1987, இது இந்திய ஆதிக்க இராணுவம் எமது தாய் நாட்டில் காலடி வைத்த காலம். அமைதிப்படை என்ற பெயரில் எமது மக்களைக் காப்பதற்கென்று இங்குவந்த இந்திய இராணுவம் தனது பேச்சிற்கு மாறாக எமது மக்களைக் கொன்றொழிக்கத் தொடங்கியது.

எமது பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள்; தமது கணவரையும் இழந்தார்கள். அந்தக் கொடூரத்தைக் கண்டு சீறி எழுந்தனர் புலிகள்.

இந்திய அரசை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கவேண்டிய காலத்தின் நிர்ப்பந்தத்துக்கு செயல்வடிவம் கொடுக்கத் தொடங்கின புலிகளின் அணிகள்.

10.10.1987 அன்று கைதடிப் பகுதியில் இருந்து கோப்பாய் நோக்கி முன்னேறி வந்த இந்திய இராணுவத்தை இடைவழியில் மறித்துத் தாக்கிய அணியில் பிரதான இடம் வகித்த மாலதி அன்றைய மோதலில் தனது இரு கால்களிலும் விழுப்புண் அடைந்தார். இயக்க மரபுப்படி எதிரியிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக சயனைட் உட்கொண்டு வீரகாவியமானார். அந்த முதற் பெண்புலியின் வரிசையில் இன்று ஆயிரம் ஆயிரம் பெண்கள், தரைப்புலிகளாய், கடற்புலிகளாய், கரும்புலிகளாய் வியத்தகு சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எழுச்சி தினத்தின் விசேட அங்கமாய் அமெரிக்க இராணுவத்திடம் விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோ படையினரின் மன்னகுளம் இராணுவ முகாம் மீதான பெண் புலிகளின் வெற்றிச்சமரின் மாதிரி வடிவம் பொது மக்களின் பார்வைக்காக நிகழ்த்திக் காட்டப்பட்டது.

அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டிருந்தன. ஆண் போராளிகள் பலர் இராணுவச்சீருடையில் ஒரு பகுதியிலும் பெண் போராளிகள் புலிகளின் சீருடையிலும் அந்தத் தாக்குதலை நிகழ்த்திக் காட்டினர். துப்பாக்கி வேட்டு ஓசைகளும் நவீன வெடிகுண்டுகளின் வெடியோசைகளும் வானைப் பிளந்தன. உண்மையான களமுனை போல அங்கு புகைமூட்டங்கள் எழுந்தன. எனினும், சுடுகலங்கள் எவரையும் பாதிக்காவண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

படையினர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தனர். புலிகளும் களத்தில் வீரச்சாவடைந்தனர். காயமடைந்த போராளிகளுக்கு களத்திலேயே சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இந்த மாதிரிச் சமரானது அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளர்களின் கமெராக்களுக்குள்ளும் புகுந்துகொண்டது.

மன்னகுளம் வெற்றிச் சமரில் புலிகளின் மகளிர், படையணியின் பிரதான கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட கேணல் விதுஷா இந்த மாதிரிச் சமரிலும் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தார். தொலைத்தொடர்புக் கருவிகள் அலறியபடியே இருந்தன. களமுனையில் புலிகள் படைக்கும் வீரதீரங்கள் கண்முன்னால் நிகழ்ந்துகொண்டிருந்தன.

மாலதி படையணியின் தளபதிகளில் ஒருவரான தமிழ்ச்செல்வி மன்னகுளம் தாக்குதல் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

"இந்தத் தாக்குதல் மழை காலத்திலேயே எம்மால் தொடங்கப்பட்டது. அதனால் சிறந்த நிலைகளை எம்மால் அமைத்துத் தாக்கமுடியாத நிலை ஏற்பட்டது. எதிரியின் பலமான எதிர்ப்பு இதில் இருந்தது. எனினும் எமது திட்டமிட்ட தாக்குதல் யுத்திகளால் இம்முகாமை வெற்றிகரமாகத் தாக்கி அழித்து நூற்றுக்கணக்கான படையினரைக் கொன்றதுடன் பல ஆயுதங்களையும் அள்ளி வந்தோம்.

இந்தச் சமரில் 152 படையினரின் சடலங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாகப் படைத்தரப்பிடம் கையளிக்கப்பட்டன. எமது தரப்பில் 22 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்" என்று கூறிமுடித்தார்.

களத்திலே தனது இரண்டு கால்களையும் இழந்த போராளி ஒருவர் ஊன்றுகோல்களின் உதவியுடன் சக போராளிகளுடன் வந்து நின்று இந்த மாதிரிச் சமரைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார். இடையிடையே அவர் தன்னையும் மறந்து "அடியுங்கோ! அடியுங்கோ! மெயினுக்கு ஓர் ஆட்லறி போடுங்கோ!" என்று உரத்த குரலில் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

தனக்கு இரண்டு கால்களும் இல்லை என்ற துயரம் அவரது முகத்தில் துளி கூட தெரியவில்லை. ஏனைய போராளிகளைப்போல அவரும் சந்தோசமாக அங்கு சாதாரணமாக நின்றுகொண்டிருப்பதைப் பார்த்த போது ஆச்சரியத்தை அடக்கமுடியவில்லை.

சமர் முடிவடைந்ததும் பிரதான மேடையில் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

கலை நிகழ்வுகளில் பெரும்பாலானவை பெண் போராளிகளின் படைப்புக்களாக அமைந்தன. பெண் புலிகள் சுமார் 20பேர் பங்குபற்றிய 'கனவுகள் மெய்ப்படும் காலம்' என்ற இசையுடன் கூடிய நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக நடந்தது.

தமிழீழப் பெண்களின் செயற்பாடுகள் ஆரம்பகாலம் முதல் இன்று வரை எவ்வாறு அமைந்திருக்கின்றன, புலிகளின் போராட்ட நிலைப்பாடுகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கிய தடைகள் என்பவற்றை அங்கிருந்த மக்கள் அனைவரும் இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அந்த நிகழ்வு அமைந்திருந்தது.

2ஆம் லெப் மாலதி படையணியின் உருவாக்கத்தில் களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாய் ஒலித்த 'வெஞ்சமரின் வரிகள்' என்ற பாடல் ஒலிப்பேழையும் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாலதி படையணியின் கட்டளைத் தளபதி கேணல் விதுஷாவிடம் இருந்து முதலாவது இசைத்தட்டை புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் வரிசையில் கவியரங்கம், நடனநிகழ்வுகள் போன்றனவும் இடம் பெற்றன.

தனது கையொன்றை இழந்த பெண்போராளி ஒருவர் தான் வடித்த கவிதையை அங்கு வாசித்த பொழுது அங்கிருந்தவர்களின் இதயங்கள் ஒருகணம் சோகத்தால் அடைத்து மீண்டன.

அவர் தனது கவிதையில் தன் சக போராளிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது -

"களத்திலே எனக்கு
கை பறந்தபோது
தமக்குக் கைபறந்ததாய்
துடித்துப் போன
தாயுள்ளம் கொண்டவர்கள்
என் தோழியர்"

என்று கூறியது எதிரியைத் துடைத்



தெறிவதில் இரும்பு போன்ற உறுதி கொண்ட போராளிகள் சகபோராளிக்கு ஒரு துன்பம் என்றால் துடித்துப் போகின்ற கனிவான இதயம் படைத்தவர்கள் என்பதை விளக்கியது.

இதனையடுத்து, தமிழீழ இசைக் குழுவினரின் இசை நிகழ்வும் இடம் பெற்றது.

இவ்வாறானதொரு மாபெரும் நிகழ்வில் கலந்துகொண்டு தமிழீழ பெண்புலிகளின் வீரதீரங்களைக் கண்டுகேட்டு அறியக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்த திருப்தியில் மறுநாள் காலையில் மக்கள் தமது இடங்களுக்குத் திரும்பினர்.

**அற்புதன்**

## தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் வழக்கு வாபஸ் பெறப்பட்டு விடுதலை!

கொழும்பு,ஒக்.19

வெடிபொருள்கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களாகக் காவலில் வைக்கப்பட்டிருந்த பசறையூரித்தோட்டத்தைச் சேர்ந்த கணபதி திருச்செல்வம் என்பவர் பதுளை மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.டி.ரத்நாயக்காவினால் கடந்த புதன்று விடுதலை செய்யப்பட்டார்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றின் அடிப்படையில் இரண்டு வழக்குகள் இவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வழக்குகள் மீதான விசாரணைகள் பதுளையிலும் கொழும்பிலும் நடைபெற்றுவந்தன.

தனது கட்சிக்காரரை சித்திரவதைக்குள்ளாக்கியே குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்று சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி புதனன்று இடம்பெற்ற விசாரணையின்போது கூறினார்.

வழக்கை மீளாய்வு செய்யுமாறு அரசசட்டத்தரணி குமாரசிங்கவை நீதிபதி அறிவுறுத்தினார். இதையடுத்து சந்தேக நபருக்கு எதிரான வழக்கு வாபஸ் பெறப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

எதிரி சார்பில் மனித உரிமைகள் இல்லச் சட்டத்தரணிகள் இரா. ஜேட்றொய்கி, கே.பூபாலசிங்கம் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

(எ)

### வன்னியிலிருந்து திரும்பி

## மீளக்குடியமர்ந்தவர்களுக்கென 'எக்கோ' உதவியுடன்400 வீடுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யுத்த சூழ்நிலை காரணமாக வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று தற்போது மீளக்குடியமர்ந்துவரும் யாழ். மக்களுக்கு 'எக்கோ' நிறுவனத்தின் உதவியுடன் 400 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மனித முன்னேற்ற நடுநிலை மன்ற இயக்குநர் அருட்திரு.இ.யோ. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்துள்ளார்.

யுத்த அனர்த்தங்களால் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ள பகுதிகளிலேயே முன்னுரிமை அடிப்படையில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்றும் -

இந்த வீட்டுத் திட்டத்தின்கீழ் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 110 வீடுகளும், தென்மராட்சிப் பிரதேச செயலர் பகுதியில் 100 வீடுகளும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குருநகர், பாசையூர் பகுதிகளில் 100 வீடுகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 90வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன என்றும் - அருட்தந்தை தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த சுமார் 100 மலசல கூடங்களும், 75 கிணறுகளும் புனரமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-5)

## எழுத்து - பேச்சு - ஊடகம் ஆகியவற்றின் சுதந்திர உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளனின்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



செய்திக்காக
05
06
1961

செய்தியாக
19
10
2000

# அமரர் மயில்வாகனம் நிமலராஜன்

பேனா முனையால்
பொய் முகங்கள் பல கிழித்து
துப்பாக்கி மிலேச்சர்களின்
கைப்பாவை ஆகாமல்...

அனல் கக்கும் மும்மொழியில்
தணல் தெறித்த செய்தி சொல்லி
நினைவாகிப் போனீரோ?

நின் நினைவை எம்மிடையே
நிரந்தரமாய் விட்டுவிட்டு
நிம்மதியாய் போனீரோ?

பத்திரிகை தர்மத்தை
யுத்த பூமியில் காத்தவனே!
நீ மரணிக்கவில்லை - எம்
உயிரில், உணர்வில்
உறைந்தே நிற்கின்றாய்!

**உனது குரல் ஓங்கி ஒலிக்கட்டும்!**

அப்பா, அம்மா, மனைவி, மக்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்,
நண்பர்கள், உறவினர்கள்.

(C/24317)